
REGD 4642

# திராவிடநாடு

லங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய்நாடு 12 காசு

மலர் 9 | 16-7-50 | இதழ் 3




காங்கிரஸ் தர்பார், பார்!

# இடந்தேடிகள்!

நண்பன் நாயகம் திடுதிடுவென்று ஓடிவந்தான். திடீர் என ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்—என்னைத் திடுக்கிட வைக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு!

இடியுது பார், காங்கிரஸ் கோட்டை! அடிதடிச் சண்டை ஆகுது கேள் அடிக்கடி! பொடிப் பொடியாகிடும் நாள் வருகுது வெகு விரைவில்! படபடவெனப்பேசாது, கண்டுவா, பொறுத்திருந்து! — என்று முழக்குவாயே தூற்றல் துந்துபி, அத்தனையும் உன் வயிற்றெரிச்சலையும், பொறாமையையும், பொச்சரிப்பையுந்தான் காட்டுகின்றன என்பது புரிந்துவிட்டது. நடக்கிறதே காங்கிரஸ் தேர்தல் — எப்படிப் பார்த்தாயா? எவ்வளவு மும்முரமாக, முடுக்காக, பலமான போட்டியோடு நடந்ததே! ஒரு நாட்டுத் தேர்தல் கூட இப்படியிருக்காது. ஒரு கட்சியின் நிர்வாகிகள் தேர்தலுக்கு இவ்வளவு அமர்க்களம் — இது எதைக் காட்டுகிறது? கட்சிக்கு நாட்டவர் காட்டும் ஆதரவு— மக்கள் கொட்டிக் குவிக்கும் ஆர்வம் — காங்கிரஸ் வளர்த்திடும் வெற்றிக்கு அத்தாட்சி முத்திரை — என்பதை அறிவாயா?

அவன் கேள்வி இது!

நான் சிரித்தேன்—சிறிது நேரம் சென்ற மௌனம்—பிறகு பேசினேன்.

"விடை வேண்டுமா? இப்பொழுதே சொல்லட்டுமா" என்றேன்.

"ஆகா, சொல்லேன்—முடியுமானால்!" என்றான்.

"கடைசிவரை இருந்து கேட்க வேண்டும். விடையின் சூடு தாங்காமல் இடையிலேயே ஓடிவிடக் கூடாது" என்ற முன்னுரையுடன், விடை கூறினேன். அவன் ஏதும் பேசாமல் நடையை கட்டிவிட்டான்!

X X X

பலத்த போட்டி

போலீஸ் பந்தோபஸ்துடன் தேர்தல்கள் நடந்தன.

வோட்டுகள் செல்லுபடியாகாதென எதிர்ப்பு.

இடமாற்றி குறியிட்டதற்கு ஆட்சேபம்.

வழக்காடவும் தயார்.

கூண்டேறியும் நின்றனர்.

தடை உத்தரவும் பெற்றனர்.

வாய் வீச்சும் இருந்தது.

கைகலப்பு ஏற்படும் நிலை.

அடிதடிக்கும் அஞ்சமாட்டோம்.

இப்படி ஆயிரந்தலைப்புகள் கொடுத்து அழகழகாக வெளியிடலாம், காங்கிரஸ் பஞ்சாயத்து, டெலிகேட்.....இத்யாதி 'சத்' பதவிகளுக்கு நடந்திடும் தேர்தல் திருவிளையாடல்களைப் பற்றி — ஆனால் அவர்கள் விபரீதங்களை விழுங்கிவிட்டு வெளிப்பகட்டுக்கு வேண்டியவைகளை மட்டும் பத்திரிகைகளுக்குத் 'தீனி'யாக்கிவிட்டு திருப்தியடைந்து விடுகின்றனர். தீர்க்கமாகச் சிந்திப்பவர்களுக்கு இந்த 'திருட்டு' தெரியாமல் போய்விடாது!

நண்பன் நாயகம் கேட்கிறான்—இத்தனையும் ஆதரவின் விளைவு, ஆர்வத்தின் அறுவடை, வெற்றியின் நர்த்தனம் என்றெல்லாம்! அதுவா உண்மை? மந்திரிப் பதவிக்கும், மற்ற அதிகார இடங்களுக்கும் ஏற்படவேண்டிய போட்டியையும் தோற்கடிக்கிறது, ஒரு அரசியல் கட்சியின் 'நிர்வாகிகளை நிர்ணயிக்கும் தேர்தலிலே ஏற்படும் போட்டா போட்டி, 'நான் முந்தி, நீ முந்தி' என ஓடிவரும் இடம்பிடிப் பந்தயம்! ஏன்?......

கேட்கிறான் நண்பன் — நாயகம்
மட்டுமல்ல, நாட்டில் சில 'நல்லதம்பி
கள்'—வெள்ளையுள்ளங் கொண்டவர்
கள் அவர்கள்—கள்ளங் கபடு அறி
யாதவர்கள்—அவர்களுக்கு, 'இந்த
வெளிச்சம் போடும்' வெளி வேடக்
காரர்களின் சூதாட்டத்தின், சூழ்ச்
சித் திட்டத்தின் உண்மை வரலாறு
தெரியாது தான்—தெரியக்கூடாது
என்று மறைக்கத்தானே, திரை
கட்டுகிறார்கள், பத்திரிகைகள்
மூலம்! உண்மையறிந்தோர் சொல்லி
விடுவார்களோ என்ற அச்சத்தால்
அவர்கள் குரலுக்குத் தடை என்று
குரவளையைப் பிடித்து நெறித்துக்
கொன்றுவிடத் துடிக்கிறார்கள்!

X X X

முப்பது கோடி சனங்களின் ச
கம், முழுமைக்கும் ஒரே உரிமை
கட்சி எங்கள் காங்கிரஸ் மகாசபை
என்று வீர விருத்தமிசைத்தவர்கள்
இன்று தேடுகிறார்கள் ஆட்களை —
இது நமக்குத் தெளிவாகத் தெ
கிறது. நாட்டவரின் கண்களி
மண்ணைத் தூவி விடுகிறார்கள், மி
எளிதில்!

தீவிர அங்கத்தினர், சாதாரண
அங்கத்தினர் என்று பிரிவுகள் கூ
உறுப்பினர் சேர்க்கும் ஏட்டை
பிரிக்கும்பொழுதே இவர்கள் எ
வளவு சோரத்தனமான பாதையி
சோக நடை போடுகிறார்கள் என்ப
தெரியும்—வீரம் பேசி, வேக நடை
காட்டிய காலம் போச்சு என்ப
புரியும்! கெட்டிச் சாயம் கியாரண்
உள்ளது என்றும், உத்திரவாத
தரமுடியாது என்று ஜவுளி ஜம்
லிங்கம் கூறுவதுபோல ரகம் பிரி
பதே சிரிப்பாயில்லையா?

தீவிர அங்கத்தினர்கள் வழக்க
போல் கதர் அணியவேண்டும். கா
கிரசின் நிர்மாணத் திட்டங்கள்
குறைந்த பட்சம் இரண்டு அம்ச
களையாவது தமது அன்றாட வா
கையில் நடத்தி வரவேண்டும்.

வழக்கம்போல் எனக் கூ
பொழுதே அவர்கள் குரலி
தொனிக்கும் தழதழப்புத் தோ
றமே — அவர்கள் நடந்துவ
பாதை எவ்வளவு வழுக்கு நில
இருக்கிறது என்று அறியலாமே
அவர்கள் நழுவிக்கொண்டே போ
றார்கள் என்று உணரலாமே! அ
மட்டுமா? குறைந்த பட்சம் எ

கூறி, எதற்கும் குனிந்து கொடுத்துக் கூட்டங் கூட்டப் பார்க்கிறார்கள்—முருக்க மரத்திலிருந்து இறங்கி வருகிறார்கள்—என்று கூறாது கூறவில்லையா அந்த வார்த்தைகள்?

தீவிர மெம்பர்களைத் தேடுகிறார்கள்—இப்படி! இருந்தும் போட்டியும், பூசலும், ஏசலும் இருக்கின்றன, தேர்தலில் இந்த நிலை அமோகமான ஆதரவாம்...அப்படியும் சொல்ல ஆட்கள் இருக்கிறார்கள்.

x x x

மதுரை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 26 இடங்களுக்கு 127 பேர் தமது அபேட்சாப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

செய்தியைப் படித்தவுடன் திகைப்பு வரும். தெளிவு பிறந்தவுடன் சிரிப்பும் வரும். மாகாண காங்கிரஸ் கமிட்டியில் இடம்பிடிக்க இவ்வளவு போட்டி! நாட்டிற்குத் தொண்டு செய்யவா இப்படித் தவிக்கிறார்கள்! ஏழைகள் வாழ்வைச் செழிக்கச் செய்யவா, இப்படி அலைமோதுகிறார்கள்! தியாகம் புரியவா, நைந்த வாழ்வினருக்குச் சுகத்தைத் தேடித்தரவா, தெளிவில்லா சிந்தனையுள்ளங்களுக்குத் தெளிவு சேர்க்கவா, வளத்தைப் பெருக்கவா, வளைந்த வாழ்வை நிமிர்த்தவா...எதற்கு இவர்கள் இப்படிப் போட்டியிடுகின்றனர்? தியாக புத்தி உச்சியை அடைந்துவிடவும் இல்லை. பிறர் நல சேவையிலே பரிவும்பிறந்துவிடவில்லை. தீவிர உறுப்பினர்கள் என்று பிரித்திடும்பொழுதே இவர்கள் குட்டு வெளிப்பட்டு விட்டதே!

ஆர்ப்பாட்டக்காரர் திருவிழாவாக, இந்தக் கட்சித் தேர்தல் இருக்கும்பொழுதே தெரிகிறது நமக்கு, இது அதிகாரம் நாடி ஓடுவோரின் கொண்டாட்டம் என்று' நண்பன் நாயகம்-ஒரு அப்பாவி. அவன் சூது வாதறியாமல் பேசிவிட்டான்—என்னிடம் கேள்வியை வீசிவிட்டான்!

தேசத் தொண்டை, வெளியிலிருந்தும் செய்யலாம். மாகாணக் கமிட்டியிலில்லாமல் கூடத் தியாக வாழ்க்கை நடத்தலாம். முடியும்—அது உண்மை விரும்பிகளால் பாராட்டப்படக் கூடிய நிகழ்ச்சியுங்கூட! ஆனால் அவர்கள் தியாகத்திற்காக அல்ல, அதிகார யோகத்தை, ஆட்சி போகத்தை, அணைத்துக் கொள்ளத் துடிக்கிறார்கள். தொண்டு செய்ய அல்ல, அதிகார மதுவை மொண்டு குடிக்க ஆலாய்ப் பறக்கிறார்கள்!

x x x

இந்தத் தேர்தல்களிலே வெற்றி பெறுவோர் பட்டியலைப் படித்துப் பார்க்கும் பழைய நாள் தேசபக்தன் பரமசிவம் பொருமுகிறான். சிறை சென்ற செங்கமலம் சினங் கொள்கிறான். காந்திப்பித்தன் கண்ணப்பா கண்ணீர்வடிக்கிறான். தீவிரவாதி, தீப்பொறியென்று பட்டம் பெற்ற கட்டிளங் காளை காளியப்பன் சீறிடுகிறான். ஏன்?

அவர்கள் எதிர்பார்த்தவர்கள் அங்கு இல்லை. நேற்று முளைத்தவைகள் இன்று கூத்தாடுகின்றன. பணப் பெட்டிகள், பகல் வேடக்காரர்கள், பதவி வேட்டைக்காரர்கள் — இவர்களுக்கு இடம் இருக்கிற அளவு உண்மைத் தியாகிகளுக்கு இடம் இல்லை ஆகவேதான், ஆயாசம் பிறக்கிறது. ஆத்திரம் வளர்கிறது!

இப்பொழுது இடந் தேடிகள் பதவிப் பீடமேற காங்கிரசைப் படிக்கட்டாகக் கருதிவிட்டனர். ஆகவேதான் தேர்தல்கள், திருவிழாக்களாக மாறிவிட்டன — போட்டி வலுத்து, குத்து வெட்டுவரை போய்விட்டன!

பணம் பறந்திருக்கிறது, கார் காற்றாக மாறியிருக்கிறது, ஆட்கள் அம்புகள் போல பாய்ந்து சென்று வேலை செய்திருக்கின்றனர்...இடையிடையே வாய் வீச்சும், கைபாய்ச்சலும், கம்பு, கழி ஒச்சலும் இருந்திருக்கின்றன. குழப்பம் வளர்ந்து, வழக்காக மாறி, கூண்டேறிடவும் துணிந்திருக்கின்றனர்.

இந்தப் 'புதுவரவுகளின்' உள்ளெண்ணத்தை, கள்ளக் கருத்தை அறிந்து கொண்டவர்கள், அழிவுப் பாதையிலே நடந்திடும் காங்கிரசை, சாவுக்குழிக்கு மிக விரைவாக்க வந்திருக்கும் 'புதுக் காலன்கள்' என்பதை உணர்ந்தவர்கள் வருந்துவர். ஆதரவு என்று கூறி ஆடிப்பாடி மகிழ மாட்டார்கள். ஆயாசமடைவார்கள், அமைதியுள்ளங் கொண்டவர்கள். ஆத்திரக் கூத்தாடுவார்கள், படபடப்பு சுபாவமுள்ளவர்கள்!

"காங்கிரசு பஞ்சாயத்துத் தேர்தல்களில் புதிதாகச் சேர்ந்துள்ள காங்கிரசுக்கார கோஷ்டிகளின் போட்டா போட்டிக்கிடையில் பழம் பெரும் சத்யாக்ரகிகளும் இடம் பெறுவது அசாத்தியம் — எனவே அப்படிப் பட்டவர்களைத் தேர்தலுக்கு நிற்காமலேயே சுமார் 10 வருடங்களுக்குக் காங்கிரசு பஞ்சாயத்துக்கு நியமித்து விடலாம்"...

புதிதாகச் சேர்ந்துள்ள இடந்தேடிகள் ஏராளம்—அவர்கள் போடும் கும்மாளந்தான் இந்தக் கட்சித் தேர்தல் தர்பார் என்று நாம் சொன்னால் சீறுவர். புதிதாக வந்தவர்கள் உண்டு என்று கூறுகிறார், அனந்தசயனம் அய்யங்கார், இந்திய பார்லிமெண்டின் உதவி சபா நாயகர், அவர்களின் அணைப்பிலே இருப்பவர்.

இடந்தேடிகள், பதவிப் படிக்கட்டுகளாக இந்தப் பதவிகளைக் கருதி இப்படி மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள் என்பது சிறு குழந்தையும் புரிந்து கொள்ளும். இருந்தாலும் நண்பன் நாயகம் போன்றோர் இருக்கிறார்கள்.

புதியவர்கள் வந்து புகுந்து கொண்டு செய்யும் போக்கிரித்தனங்கள் எந்த அளவிற்குப் போய் விட்டது தெரியுமா? பழம் பெரும் தேச பக்தர்கள் ஒன்று சேர்ந்து தற்கால காங்கிரசில் உள்ள விரும்பத்தகாத போக்குகளை நீக்கி ஸ்தாபனத்திற்குள் பழையபடி சேவா உணர்ச்சியைப் புகுத்த வேண்டும் என்று பேசியுள்ளார், அய்யங்கார், சென்ற திங்களில் திருப்பதியில் பேசும்பொழுது.

x x x

நிலைமை இப்படி—ஆனால் நீட்டி முழக்குவதை அவர்கள் நிறுத்துவதே இல்லை, ஆதரவு பெருகுகிறதாம், உணர்ச்சி வழிகிறதாம்—சொல்கிறார்கள் "அவர்கள்

ஜூன் மாதத்தில் பெங்களூருக்கு திருவாளர் நாளா வந்திருந்த போது, பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி கேட்டார்களாம். காங்கிரசு தனது தேர்தல் பிரகடனப்படி நடந்து கொள்ளவில்லை என்று புகார்கள் உலவுகின்றனவே, இதற்கு விடை என்ன என்ற வினாதான்

அவைகளில் தலைமை வகித்ததாம்! உடனே அடித்துப் பேசியிருக்கிறார், அடுத்த பொதுத் தேர்தலில் நாங்கள்தான் வரப்போகிறோம், இது உறுதி. புகார்கள் அத்தனையும் பொய்யானவை, புகைந்து போக வேண்டியவை என்று!

அவரே, வேறொரு கூட்டத்தில் பேசும்பொழுது சுயராஜ்யம் கிடைத்து விட்டதால், நாம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் எனக் கருதக்கூடாது என்றும், பாமர மக்கள் காங்கிரஸ்காரர்கள் மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளார்கள், ஆகவே தொடர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று துவண்டு விழும் காங்கிரசுக்கு முட்டுக் கொடுத்திட்டார். இப்படி, சரிந்திடும் காங்கிரசுக்கு ஆதரவாம், அதனால்தான் கட்சித் தேர்தலிலேயே இத்தனை போட்டா, போட்டி! என்று பேசுகின்றனர்.

X X X

வங்கத்திலே, கேரளத்திலே, தெலுங்கு தேசத்திலே......இப்படி தேர்தலில் தகராறுகள் நடந்திருக்கின்றன. அதனை, அலங்கோலத்தின் அடையாளம் என்று காட்டாமல், ஆதரவின் ஆனந்தக் கூத்து என்று மாற்றிட முனைந்துவிட்டார்கள், தந்திரக்காரர்கள்—அதனையும் நம்பிடும் 'ஐயோ பாவங்கள்' ஏராளம் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில்!

புதுவெள்ளம் வந்திடுவதுபோல, இடந்தேடிகள் வந்து குவிந்துவிட்டனர். ஆனால் அதே நேரத்தில் அடங்காப் பிடாரிகள் எண்ணிக்கை வளர்ந்து வருவதையும் மறந்துவிடக் கூடாது. அங்கங்கே, அவர்கள் தொகை வளர்கிறது. அதுமட்டுமல்ல, புதியதொரு பெயரிட்டுப் போரிடவுந் தொடங்கிவிட்டனர்.

அன்புப்பேச்சு, ஒழுங்கு நடவடிக்கை என்ற மிரட்டல், அடங்கித் தானகவேண்டும் என்ற அடக்குமுறை....எல்லாவற்றையும் கடந்து அவர்கள் புதுநிலை, புதுவாழ்வு ஏற்று, போர்க்கோலம் பூண்டுவிட்டனர்.

உள் விவகாரம் இப்படி ஊமைக் காயமாக இருக்க, ஊர் மக்களிடம் மட்டும், உரத்த குரலில் பேசிவிடுகின்றனர்.

இலட்சியவாதிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இடந்தேடிடும் இரும்புப்பெட்டிகள் வந்து குவிகின்றனர் — காங்கிரசில்! இப்பொழுது நடக்கிற இயக்க நிர்வாகிகள் தேர்தலில் பழைய தியாகிகள் இடம் பெறுமல் போய்விடுவர் என்று கூறினர் அய்யங்கார், சோகக் குரலில். உண்மையை ஒத்துக் கொண்டுள்ளார்.

இப்பொழுது தேர்தலில் தீவிரம் இருக்கிறது. பதவிக்காக பதட்டமும், படபடப்பும் அடைவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

ஏன்............

நண்பன் நாயகம்மட்டுமல்ல, நாட்டவரே, நம்மிடம் கேட்டாலும் எடுத்துவீசும் விடையை விளக்கும் படம், நம் இவ்வார முகப்புப்படம்.

உருட்டு விழிகளைக் காட்டி,மிரட்டுக்குரலைப் பூட்டி, தன்னிடம் சிக்கிக் கொண்ட அதிகாரத் துப்பாக்கியை நீட்டி, காங்கிரசு தன்னை வளர்த்துக் கொள்ள முனைந்துவிட்டது, பார், பார், காங்கிரசு தர்பார் பார் என்று பாடிடும் வகையில்!

ஆட்சிப் பீடமேறிய பிறகாவது, நாட்டுமக்களிடம் நாணயமாக நடந்து கொள்ளவேண்டும். அதிகாரம் கிடைத்த உடனேயே அதனைப்பயன்படுத்தி, மூடவேண்டிய காங்கிரசை பீடமேற்றத் துணிந்துவிட்டார்கள்.

மந்திரிகள், சர்க்கார் செலவில்,கட்சிப்பிரச்சாரம் செய்கின்றனர். அதிகாரத் துப்பாக்கியால், பொதுமக்களை மிரட்டி, நிதி சேர்க்கின்றனர். மாநாடு கூட்டுகின்றனர்.

கள்ளமார்க்கட்டுக்கு, கதர்
சட்டை கழுவாயாகிறது. இல
வியாபாரத்திற்குக் கதர்க் குல்ல
பாதுகாப்பளிக்கிறது. காரியங்
சாதிக்க, கட்சிப்பெயரே, "மோக
மந்திர"மாகிறது.

இதைப் பார்க்கிறார்கள் இடந்
டிகள். உள்ளே புகுந்துகொண்
பதவி நோக்கிப் பயணம் செய்ய
தொடங்கிவிட்டனர். இதனைக் கா
கிற கண்ணியவான்கள் வெளியே
கின்றனர். உடனே அவர்களுக்
அடங்காப் பிடாரிகள் என்று பட்ட
தந்துவிடுகின்றனர்.

இன்று காங்கிரசு காட்டும் அ
காரத்துப்பாக்கியைக் கண்டு பொ
மக்கள் அஞ்சுவதைக் கொண்டே
அளந்துவிடுகிறார்கள், இடந்தேடிக
அவர்கள் கணக்கும்பொய்த்துவி
போகிறது, விரைவில்!

பரமசிவன் வரந்தந்தாராம், பத்
சூரனுக்கு! அது பலிக்கிறதா, இ
லையா என்று ஆண்டவன் தலையி
கைவைத்து, தான் பெற்ற வரப்ப
எரிந்து போகிறாரா இல்லையா என்
பார்க்கப்போனானும். கடைசியி
மைத்துனர் திருமால் மோகி
வேடம் போட்டுக் காப்பாற்றினா
சிவனை —இது கதை!

இந்தப் "பஸ்மாசுரமோகின்
நடந்துவிடும் என்பதை மன
நிறுத்தவேண்டும்.

தாங்கள் கொடுத்ததுதான் அ
அதிகாரத் துப்பாக்கி என்
உணர்ந்துவிட்டால், பொதுமக்க
அதைப் பறித்திடத் தயங்கிடமா
டார்கள். அவர்கள் 'மோகி

(16-ம் பக்கம் பார்க்க)

படிக்கவேண்டிய பத்திரிகை

★ நவநீதம் ★

ஆசிரியர், வல்லிக்கண்ணன்.

அறிவுக்கு விருந்து. சிந்தனைக் களஞ்சியம். கதை கட்டுரைகளின் கதம்பம். வல்லிக்கண்ணன் தீட்டும் தொடர் கதை 'தேவகி' இந்த இதழில் துவங்குகிறது.

80-பக்கங்கள் :: விலை 4 அணு

விபரங்களுக்கு:— மானேஜர்
'நவநீதம்'
6, வெங்கடாசல செட்டிதெரு சென்னை—5.

(ADVT)

### களவுக் கல்லூரி

கல்கத்தா ஜூன்—24

வடகல்கத்தாவில், ஒரு திருடர்கள் கூட்டம், களவாடக் கற்பிக்கும் கல்லூரி நடத்துகிறார்களாம். பயிலும் மாணவர்கள், பயிற்சி முடிந்தவுடன் பஸ், ட்ராம்களில் 'ஜேபடி' செய்வதற்கு அனுப்பப் படுவராம்.

### மாளிகையில் திருட்டு

லண்டன் ஜூன்—24

மேரி ராணியார் மாளிகையில் புகுந்து, திருடுகையில், எதிர்த்த தோழிமார்களையும் அடித்துப் போட்டுவிட்டு ஓடிவிட்டான், திருடன். தோட்டக்காரன் ஒருவனைக் கைது செய்துள்ளனர்.

### நிறுத்தி விடுகிறேன்!

திருப்பதி ஜூன்—6

22 வருடங்களாகத் திருட்டுத் தொழில் செய்துவந்த ஆசாமி, தனக்கு ஒரு ஒழுங்கான வேலை கொடுத்துவிட்டால், இந்த திருட்டுப்பிழைப்பைநிறுத்திவிடுகிறேன் என்றானும்.

செய்திச் சித்திரம்

# திருடர்கள் இராஜ்யம்!

தில்லை–வில்லாளன்

மேலே கண்ட துண்டு செய்திகளைக் கண்டதும், இணைத்துப் பிடிக்கத் தூண்டியது. சிந்தனை—படிக்க, படிக்க ஒன்றுக்கொன்று துளியும் சம்பந்தமில்லாத அவை தொடர்புடையனபோலத் தழுவிக்கொள்ள ஆரம்பித்துவிட்டன. இந்த துணுக்குகளின் இணைப்பு, எண்ணச்சுழற்சிக்கு ஒரு தூண்டுகோல்! அவ்வளவு தான்—முழுக்க, முழுக்க கற்பனை—அதுவும் ஏதோ ஒரு 'யுதியோபியாவில்' நடப்பதுபோல..........இந்த கனவுலகக் காட்சி, கருத்துள்ளோருக்காக!

இருளே வா, வா
மருளே போ, போ
பொருளே வா, வா
அருளே தா, தா

பாடுகின்றனர், பெண்களும், ஆண்களும்! இருள்தேவிக் கோயிலிலே கூடியிருந்தனர். அவர்கள் தேசத்து மன்னன் சிங்காரம் அன்று வந்திருந்தான். அவன் மனைவி சிங்காரியும் பூஜையில் ஈடுபட்டிருந்தாள்.

பாட்டு முடிந்து, கொட்டு முழக்கம் நின்று, பூசாரியின் குரல் மட்டும் கணீரென ஒலித்தது. "இருள் மாதா எங்களைக் காப்பாற்று—பகல் வேண்டாம், வேண்டவே வேண்டாம் எங்களுக்கு—பரிவோடு கேட்கிறோம்! இரவே போதும்—இருட்டே சாலும்! தேவி, அயல்நாட்டார் அத்தனை பேரும் எப்பொழுதும் தூக்க மதுவருந்திக் கிடக்கும்படிச் செய். எங்கள் காலடி யோசை கேட்காத செவிடர்களாகட்டும் அவர்கள். அன்னையே, கொள்ளையில் பாதியைச் செலவிட்டு உனக்கு கொடிகட்டி, விழா நடத்துகிறோம். இந்த திருடர்கள் இராஜ்யத்தைக் காப்பதுன் பாரமம்மா" என்று கூறிட, மற்றவர்கள் அந்த வரிகளை அப்படியே சொல்லிக் கொண்டு வந்தனர்.

மன்னன் சிங்காரம், பூஜைக்குக் குழுமியிருந்த கூட்டத்திற் கிடையிலே தோன்றினான்.

"என் நாட்டுத் திருட்டுத் திலகங்களே, களவுக் கண்மணிகாள், அஞ்ச வேண்டாம். நம் இருள்மாதேவி என்றும் கைவிடமாட்டாள். கண்ணிமைக்குள் புதைந்துகொண்டு வேடிக்கை காட்டும் விழிகளைக் கேட்டாலும் கொண்டு வரும் திறம் படைத்த தீரர்கள் உண்டு. வைத்தவன் சந்தேகிக்காமல், தோலிருக்க சுளை விழுங்குவதுபோல, பணம் சுருட்டும் சூரர்கள் இல்லையா, நம்மிடம்! நம் நாடு வாழும், நம்மவரை நலஞ் சூழும்!" என்றான்.

"நாம், இந்த நாட்டிற்குக் குடியேறும்படி விரட்டியடித்தவர்களே, அந்நிய இராஜ்யங்களிலே வாழும் வஞ்சகர்கள் தானே—ஆகவே அடிப்போம் கொள்ளை" என்று முழக்கினாள் சிங்காரி.

பூஜை முடிந்தது. எல்லோரும் கலைந்து சென்றனர்.

X X X

சிங்காரத்தின் தனியான அந்தப்புரம்—சிங்காரி எதிரில் அமர்ந்திருந்தாள்.

"திடீர்க் கவலை ஏன், என் திருட்டு ராஜாவே!" என்று கொஞ்சினாள் அவள்.

"கவலை யில்லையடி, கடுமையான யோசனை, என் கள்ளக் கட்டிக் கரும்பே, திருட்டுத் தேனே, கொள்ளையடித்த கோமேதகமே!" என்று பதில் சொன்னான், போதை யேறிய கண்களோடு!

"என்ன யோசனை — எனக்குச் சொல்லக்கூடாதா?" என்று மீண்டும் கேட்டாள் அவள்.

"இல்லை—நான் இந்த தேசத்து மன்னனாக வருவதற்கு முன்னிருந்த நிலையை எண்ணினேன். அப்படியே எண்ணங்களில் என் நி-

வைப் புதைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன்" என்ருன்.

"எனக்குக்கூட அந்தப் பழங் கதையைச் சொன்னதில்லையே! இப்பொழுதாவது சொல்லுங்களேன், கேட்போம்!" என்று வற்புறுத்தல் தொனிக்கக் கேட்டாள், அவன் மனைவி.

"சிங்காரி—அது விசித்திரமடி, விபரீதமானதடி—துயரத் தொடர் கதை! உனக்குச் சொல்கிறேன். என்னை இந்த இராஜ்யத்திற்கு ஏகச் சக்கிரவர்த்தியாக முடிசூட்டி விட்டார்கள், என்னுடனே பிறந்து, என்னுலேயே வாழ்ந்தவர்கள். நான் இந்தப் பூமியிலே அடி வைக்கக் கூட அஞ்சினேன். பாவம், இந்த இராஜ்யத்தைப்பற்றி எண்ணுவது, என்றுகூட முதலில் நம்பினேன்.

திருடர்கள் இராஜ்யம் — ஒரு விசித்திரமான மண்டலம். அங்கு பகல், பதுங்கி வாழவேண்டிய பொழுது. இரவு அவர்களின் இன்ப நேரம்! அதுவும் அமாவாசை அவர்களுக்கு வசந்த விழா. அவர்கள் கவலையைக் கடந்தவர்கள். துன்பத்தையே இன்பமாக மாற்றிடக் கற்ற மாயாவிகள். பணத்தைத்தேட பாடுபடமாட்டார்கள். அது அங்கு சட்ட விரோதம். பிற 'கஞ்சன் கன்பட்டுகள்' சேர்த்து வைத்திருப்பதை எடுத்து வருவது அங்குள்ளவர்கள் உலகத்திற்குச் செய்யும் பெருந்தொண்டு. கன்னமிடுவது, மதிலேறிக் குதிப்பது, கள்ளச் சாவி போடுவது, இருப்புப் பெட்டியை உடைப்பது, தூங்கும் பொழுது காதுகளில், கரங்களில் இருக்கும் அணிகளை, அவர்கள் விழிக்காமலே எடுப்பது போன்றவை அவர்களின் தியாகச் செயல்கள். அச்சத்தைத் துச்சமெனத் தள்ளி வைத்தவர்கள். அடி, உதையைக் கண்டும் கலங்காதவர்கள். 'இல்லை' என்ற பல்லவி பாடுவதிலே வல்லவர்கள்.

சிறையென்ற சிங்காரபுரிக்கு அடிக்கடி உல்லாசப்பயணம் நடத்துபவர்கள்—சிலநாள் தங்கியிருப்பார்கள், மறுநாளே கூடத் திரும்பிவிடுவர். மானம், மரியாதை என்ற 'மனித நோய்களை'க் கடந்த மகான்கள். இதயத்தை தசை நிலையிலிருந்து, கருங்கல்லாக்கிக் கொண்ட கண்ணியவான்கள்" என்று அடுக்கிக் கொண்டே போனுன்.

"போதும், உங்கள் பிரதாபம் ஆண்கள் மட்டும் அசகாய சூரர்கள் என்று ஆரவாரிக்க வேண்டாம். பெண்கள் திறத்தைப் பற்றிப் பேச வாய் கூசுகிறதா? வீட்டு வேலைக்கென்று புகுந்தாலும், கையில் கிடைத்ததை யெல்லாம் மடியில் மறைத்துக்கொண்டு வரும் மனோன்மணிகள் உண்டு. மாவரைக்கச் சொன்னுல், அதிலே கொஞ்சம், கல் பொருக்கச் சொன்னுல், அதிலேயும் ஒரு கால்படியரிசி களவாடி வரும் கண்மணிகள் — இந்த களவாணித் தேசத்துப் பெண்மணிகள்" என்று தன் பங்குக்குப் பேசி முடித்தாள்.

"நான் சொல்வதற்கு முன்னுல் நீயே முந்திக்கொண்டாய். கள்வனுக்கேற்ற கள்ளி நீ! கண்மணி, கவலையை விடு. இந்தக் கள்ளத்தனத்தைக் கற்பிக்க ஒரு கல்லூரியை ஆரம்பித்து விட்டேன் கள்ளக் கல்லூரிக்கு பிரின்ஸிபால் யார் தெரியுமா? பட்டினியப்பர், 'பழைய பெருச்சாளி' என்று இந்த இராஜ்யத்திலே பிரக்யாதி பெற்றவர். மாணவர்கள் இந்த இராஜ்யத்திலே உள்ளவர்கள் மட்டுமல்லவெளிதேசங்களிலிருந்தும் வலுக்கட்டாயமாகக் கூட அழைத்து வரப்படுவர். அவர்களுக்குரிய தகுதிகள் — வேலையிலலாத் திண்டாட்டம் என்ற பாடத்தில் எழுபது வாங்கியிருக்க வேண்டும். அனுதை பாடத்தில ஐம்பதுக்குக் குறையக் கூடாது. அரைவயிற்றுக் கஞ்சுக்கும் வழியற்ற அரைப்பட்டினி, திக்கற்ற நிலை, தேற்றுவார் அற்றப் போக்கு இப்படி பல பாடங்களில் தக்க மார்க்குகள் வாங்கியிருக்க வேண்டும்"—இப்படி சிங்காரம் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே சிங்காரி சிணுங்கினுள்.

"உங்களைப் பற்றிக் கேட்டால் உங்கள் கல்லூரி ஸ்தாபித்ததின் பெருமையைப் பற்றிப் பேசிவிட்டீர்கள்!'' என்று குத்தலாகக் கேட்டாள்.

"சொல்கிறேன் —நிச்சயமாகச் சொல்லிவிடுகிறேன், சொர்ணபுரிக் கொள்ளையிலே கிடைத்த சொகுசுக்கார சுந்தரி! அந்தக் காலத்தில் அரசனைக் கண்டுபிடிக்க, யானையினிடம், மாலையும், மணநீர் நிறைந்த குடமும் தந்திடுவார்கள். அது யாரையாவது ஒருவனைப் பிடித்து நீரை ஊற்றி, மாலையை அணிவித்து அழைத்து வருமாம்! என்னைத் திருடர்கள் இராஜ்யத்திற்குத் தலைவனுகத் தெரிந்தெடுத்தது பசியெனும் யானை தான்.

சிங்காரம், இன்று கள்வர் தலைவன் — ஆனுல் பல நாட்களுக்கு முன்னுல் சாதாரண சிங்காரம்—அன்னக்காவடி! ஆம் சிங்காரி, உன் காதலன் தகரக் குவளையுடன் 'தருமம் தலை காக்கும், தம்பிடி தந்திடுங்க' என்று பாட்டுப் பாடியப் பண்டாரச் சிங்காரமாகக் கூட இருந்திருக்கிறுன்.

நான், சின்னஞ் சிறுவயதிலேயே 'அக்கு தொக்கு' அற்ற அனுதையாகிவிட்டேன். ஆனுல் உடலில் வலுவிருந்தது. உள்ளத்தில் உழைத்துச் சாப்பிட முடியும் என்ற உறுதி இருந்தது.

ஆகவே, வேலை, வேலையென்று எங்கெங்கும் தேடினேன்.

'இல்லை, இல்லை' யென்று அங்கங்கே சொல்லிவிட்டார்கள்.

அனுதை நான்—ஆகவே, அடிவயிறும் பரிதாபப்பட்டுச் சும்மாயிருக்கிறதா? 'ரெகுலர்' புரட்சியையே ஆரம்பித்து விட்டது. கொஞ்சநாள் அடக்கிப் பார்த்தேன். முடியவில்லை. பசிக்காக, எதையும் செய்யத் தயாரானேன்.

பிச்சையேற்க என் மனம் இடந்தரவே இல்லை—கடைசியில் நிலைமை என்னை விரட்டிவிட்டது! ஆம், மானத்தை விட்டுப் பிச்சையெடுத்து, எனது நொந்த குடலுக்குத் 'தீனி' கொடுத்துவந்தேன். எனக்கே பிடிக்கவில்லை, இந்த போக்கு—என் செய்வது?

நான் தேடியெடுத்த பாட்டு—எனது பிச்சை வியாபாரத்தின் விற்பனைச் சரக்கு — என்னவென்று கேட்டால், சிங்காரி திடுக்கிடுவாய்! பிச்சைக்காரன் ஆனேனே, எச்சிலுண்ணும் நாய்போல் ஏங்கித் தவிக்கிறேனே, இச்சையுண்டு உழைக்க, ஆனுல் ஏது உண்டோ உரைப்பீர், மச்சுகளில் வாழ்கின்ற மடையீர் கேளீர், எச்சிலுண்டு வாழ்வதற்கோ, ஈசன் தந்தான் இமய முதல் குமரி வரை இந்த நாட்டை, கொச்சைக் கடவுள் விதியோ, நீவீர் பாவை

(9-ம் பக்கம் பார்க்க)

அபாய அறிவிப்பு

16-ம் பக்கத் தொடர்ச்சி

ஈபிட்சமுமே எங்கள் குறிக்கோள். அமெரிக்காவின் பக்கம் சேரவோ, ரஷ்யாவின் நண்பனுகவோ நாங்கள் ஒரு போதும் சேரமாட்டோம். அவ்வளவு ஏமாளிகளல்ல, புதிதாக ஸ்தாபித்த சுதந்திரத்தைப் பறிகொடுக்க!" என்று இந்தியப் பிரதமர் நேரு-நம் போன்ருரின்குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தருவது போலப் பேசினர்.

தேசிய ஏடுகளும், இதை வைத்துத் தீட்டித் தள்ளின, தலையங்கங்கள்!

ஆனல், இப்போது? அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கிறது — அமெரிக்காவின் போக்கு அடுத்த யுத்தத்துக்கான முஸ்தீபு என்று தெரிந்தும்! தென் கொரியாவுக்கு ராணுவ உதவியளிக்கும் தீர்மானத்துக்கு கையெழுத்துச் செய்திருக்கிறது.

புது டெல்லியில் ஜூலை 7ந் தேதியன்று, நேரு, "உலக யுத்தம் மூள, கொரியப் போரின் காரணமாக, பாதி சந்தர்ப்பம் இருக்கிறது" என்று வெளியிட்டிருக்கிருர். இருந்தும், அமெரிக்காவுக்கு ஆதரவாகத்தீர்மானங்களைச் செய்திருக்கிருர்—ஐக்கிய நாடுகள் சபையின் கௌரவத்தைக் காக்கப்போவதாக!

இலங்கை — இதோ அருகிலிருக்கும் சிறிய நாடு, அது அறிவித்திருக்கிறது, இலங்கையைக்கொரியப் பிரச்னையில் ஈடுபடுத்தும் எண்ணம் இல்லையென்பதாக.

எகிப்து-பாதுகாப்புச்சபை அமெரிக்காவுக்குப் பரிந்து காரியங்களைச் செய்கிறது. நீதியும் நேர்மையும் இல்லை, ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவின் எதேச்சாதிகார மண்டபமாகி விட்டது. ஆகவே, நாங்கள் ஐ. நா. சபையின் தீர்மானத்தை ஏற்பதற்கில்லை யென்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது—துணிந்து பிரகடனம் செய்திருக்கிறது.

ஆனல், நேரு சர்க்காரோ ஒரு நாள் மௌனம் சாதித்தது—பிறகு பிரகடனம் செய்திருக்கிறது. தென் கொரியாவுக்கு ராணுவ உதவியளிப்பதென்ற தீர்மானத்தை ஆதரிப்பதாக!

"தென்கொரியாவுக்கு உதவி செய்வதென்ற ஐ. நா. சபையின் தீர்மானத்தை ஆதரிக்கக் காரணம்?"

"ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆக்கிரமிக்கக் கூடாதென்பதுதான்!"

"தீர்மானம் ஐ. நா. சபையில் நிறைவேற்றப்படுமுன் அமெரிக்கா என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?"

"ராணுவ, கப்பல், விமானப்படைகளை அனுப்பியிருக்கிறது. பார்மோஸாத் தீவைச் சுற்றியுள்ள சீனக்கடலை அமெரிக்கக் கப்பற்படை முற்றுகையிட்டிருக்கிறது. ஜெனரல் மக் ஆர்தரை கொரியப் போரை நடத்துமாறு நியமனம் செய்திருக்கிறது!"

"அதாவது அமெரிக்கா நேரிடையாகப் போரில் ஈடுபட்டிருக்கிறது"

"அப்படித்தான் கொள்ளவேண்டும்"

"அப்படியானல், அடுத்த போர் மூளத்தானே நேரும்"

"நேரலாம், உலகயுத்தம் மூளப் பேர்பாதி சந்தர்ப்பம் இருக்கிறது"

"சரி. தென்கொரியாவுக்காக இவ்வளவு அவசரமும், சலுகையும் காட்ட அமெரிக்கா துடிப்பதேன்!"

"ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆக்கிரமிப்பது கூடாது என்ற ஐ. நா சபையின்......"

"அப்படியானல் ஏன் காஷ்மீரப் பிரச்னை குறித்து எவ்வித கவலையும் அமெரிக்கா காட்டவில்லை"

"என்னைக் கேட்டால்! அமெரிக்கரைப் போய்க் கேட்டாலல்லவோ தெரியும்!"

கேட்டவர் நிருபர்—கேள்விகளுக்குப் பதில் தந்தவர் நேரு. புதுடெல்லியில் ஜூலை 7-ந்தேதியன்று, பத்திரிகையாளர் விடுத்த கேள்விகளுக்கு இதுபோன்ற பதில்களைத் தந்திருக்கிருர்.

காஷ்மீரப் பிரச்சினையில் மட்டும், கொரியாவுக்குப் பரிந்து படையையும் பணத்தையும் அனுப்பும் அமெரிக்கா, ஏன் கவனமும் சிரத்தையும் காட்டவில்லையென்று கேட்டதற்கு, 'அதற்கு அவர்களைத்தான் கேட்கவேண்டும்' என்று ஆத்திரத்தோடு பதில் தந்திருக்கிருர்—நேரு, இந்தியப் பிரதமர்!

கொரியப் பிரச்சினையில் ஏன் இவ்வளவு ஆவேசம் காட்டுகிறது என்பது அறியாதவரல்ல, நேரு. இருந்தும் அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டிய 'நிர்ப்பந்தத்துக்கு' ஆளாகிவிட்டு, கேள்வி கேட்கும் போது சீறிவிழுகிருர்.

நிருபர் கேட்டகேள்வியைப் போலவே, இந்தியப் பத்திரிகைகளில் முக்கிய இடம் வகிக்கும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' 'பீரிபிரஸ்' 'நேஷன்' 'பிளிட்ஸ்' முதலாயபத்திரிகைகளும் கேட்டிருக்கின்றன. பண்டிதநேருவின் சொந்தப் பத்திரிகையான 'நேஷனல் ஹெரால்ட்' தினசரியே இதே கேள்வியைக் கிளப்பியிருக்கிறது — இந்திய சர்க்கார் கொரியாப் பிரச்சினைகுறித்துச்செய்த முடிவு சரியில்லாதது என்று எடுத்து கூறுவதுபோல!

கேள்வி நியாயம் நிரம்பியதுதான் —கொரியப் பிரச்சினை தவிர்த்து வேறு எந்தப் பிரச்சினையிலும் இவ்வளவு சிரத்தை காட்டியதில்லை அமெரிக்கா.

> காரணம் கொரியாத் தகராறு மூலம் ரஷ்யாவை இன்னொரு போருக்கு வலுக்கட்டாயமாக அமெரிக்கா இழுக்கப் பார்க்கிறது,

இந்தக் காரணத்தை இந்தியசர்க்காரின் வெளிநாட்டு விவகாரங்களை நிர்வகிக்கும் நேரு அறியாதவரல்ல; "பாதி சந்தர்ப்பம் இருக்கிறது இன்னொரு யுத்தம் மூள" என்று அவர் அறிவித்திருப்பதிலிருந்தே, அவருக்கும் இந்தக் காரணம் விளங்கியிருக்கிறது என்பது வெளியாகிறது.

இருந்தும், இந்தியாவைக் கொரியப்பிரச்சினையில் இழுத்துவிட்டிருக்கிருர்.

சுதந்திரம் பெற்றபின் இந்திய சர்க்கார்சென்றுகொண்டிருப்பதைப் பார்க்கும்போது இத்தகைய முடிவில்தான் கொண்டுபோய்விடும் என்பது பலர் எதிர்பார்த்ததுதான்.

X X X

நிலையான கொள்கை இல்லை—நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுகின்றனர்.

அமெரிக்காவின் ஆப்த நண்பனுக இருக்கவேண்டும் என்றஆசையுமிருக்கிறது; அதேபோல ரஷ்யாவுக்கும் எதிரியாகிவிடக் கூடாது என்ற ஆர்வமுமிருக்கிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 16—7—50 [காஞ்சி

## சோஷியலிஸ்டு மாநாடு

✲

'கூடிக் கலைந்தனர்! — வருத்த விருத்தம், முரட்டுக்கீதம், மிரட்டல் வாதம், இத்யாதி வைபவங்களுடன் இந்த வாரம் சென்னையில் அகில இந்திய சோஷியலிஸ்டுகள் கூடிக் கலைந்து விட்டனர்.

சரிந்துவரும் காங்கிரசுக்கெதிரான கட்சியெனப் பலரால் கருதப்படும் நிலையிலிருக்கும் சோஷியலிஸ்டுகளின் மாநாட்டைக் கூர்ந்து கவனித்தோருக்கு— பெருமூச்சுத்தான் வெளியாகும்; பூரிப்பு ஏற்படாது.

அகில இந்திய ரீதியில், உருவான வகையில், திறமை பொதிந்த இளைஞர்களை முன்னணி வீரர்களாகக் கொண்ட இக்கட்சியின் போக்கை 'சென்னை' வெளிச்சமாக்கி விட்டது. கட்சிக்குள்ளிருக்கும் கருத்து முரண்பாடுகள், தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணனின் முரட்டுப் போக்கு, தெளிவில்லாத நிலை ஆகியவைகளை வெளியார்க்கு விளக்கி விட்டது சென்னை மாநாடு.

'அர்த்த நாரீசுவரர்கள்' என்று கேலிக்காக முன்பெல்லாம் நாம் கூறுவதுண்டு — சோஷியலிஸ்டுகளைக் குறித்துக் கூறும்போதெல்லாம்.

காரணம், கீதையின் பெருமை குறித்து பக்தசிகாமணிகளிடமும், ரமணரின் அற்புத ஞானம் பற்றி அவரது சிஷ்யகோடிகளிடமும், இந்தியின் முக்கியத்துவம் சம்பந்தமாக இந்திப் பிரச்சாரசபையிலும், 'தமிழ் கற்க முயலப்போகிறேன்' என்று தமிழன்பர்கள் கூட்டத்திலும், நிற மாறும் பச்சோந்திபோல — இதற்கு முன் பற்பலதடவைகளில் பேசியவர் கட்சியின் பொதுக் காரியதரிசியாக இருந்த ஜயப்பிரகாஷ்; காங்கிரசின் மகத்துவப் பாதையில் சென்றபடியே சோஷியலிஸ்டு சமுதாயத்தை ஸ்தாபிக்கப் போவதாக வீரமுழக்கமிட்டு —பின் விலகியவர்!

எனினும் முற்போக்கு எண்ணங் கொண்ட பற்பல செயல்வீரர்களைக் கொண்டதாக இருப்பதால், காங்கிரசுக்கு எதிராக அகில இந்திய ரீதியில் சோஷியலிஸ்டுக்கட்சி, வலுப் பொருந்திய எதிர்க்கட்சியாகலாம் என்று எல்லோரையும் போலவே எதிர்பார்த்து வருகிறோம்.

இந்தியநாடு —சுயநலமிகளின் வேட்டைக்காடாகிவிட்டது. நாமோ, 'நமக்கென ஒருநாடு' என்ற திட்டத்தின்கீழ் பணியாற்றி வருவதால்— தென்னாட்டில் மட்டும் காங்கிரசுக்கெதிரான எதிர்க்கட்சியாகி வருகிறோம்—நமது கொள்கை வெற்றிக்கான வகையில் பிரச்சாரப் பீரங்கியாகயிருந்தவண்ணம்!

ஆகவே, வட இந்தியாவில் முற்போக்கு இலட்சியங்களைக் கொண்ட சோஷியலிஸ்டுக்கட்சி காங்கிரசுக்கெதிரான, வெற்றிப் பாசறையாக ஆகி, எதேச்சாதிகாரத்தையும் பாசிசத்தையும் எதிர்த்துப் போராடும் போர்முகாமாக ஆகவேண்டுமென்று விரும்பினோம் — விரும்புகிறோம்.

"ஆனால், 'சென்னை'யைக் காணும்போது 'மாணிக்கம், மண்ணுக்கடியில்!' என்பதுதான் நினைவுக்கு வருகிறது.

*    X    *

கட்சியை நிர்மாணித்த முக்கியஸ்தர்களில் ஒருவரான அருணா ஆசப் அலி — விலக்கப்பட்டு விட்டார்! இன்னொரு செயல் வீரரான அச்சுத பட்டவர்த்தன் விலகி விட்டார்!!

இரண்டுக்குமுள்ள காரணங்களை ஆராயுமுன் பொதுக் காரியதரிசியாக இருந்த ஜயப்பிரகாஷ், கட்சியைச் சேர்ந்தோரிடையில் ஏற்பட்ட 'பிளவு' குறித்து, கூறியிருப்பதைக் கவனித்தாலே போதும்.

"தீவிர வாதிகளாக வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். புரட்சிகரமான வகைகளில் அவசரமான நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புகின்றனர் — அது ஆகாது! சூழ்நிலையைக் கவனித்துத்தான் எதையும் செய்யவேண்டும்" என்ற கருத்துத் தொனிக்க, அவர், தனது அறிக்கையில் விளக்கியுள்ளார்.

ஆனால், தான் விலகிக் கொள்வதாக அறிவித்து அனுப்பியிருக்கும் கடிதத்திலோ "சோஷியலிஸ்டுக் கட்சி எந்த நோக்கங்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப் பட்டதோ, அதை விட்டுப் பாதை மாறுகிறது. இப்போது ஆதிக்க வேட்டையிலிறங்கி விட்டது" என்று தோழர் அச்சுத பட்டவர்த்தன் அறிவித்துள்ளார்.

அச்சுத பட்டவர்த்தன் சாதாரணமானவரல்ல; கட்சிக் கட்டிடத்தின் முக்கிய தூண்களில் ஒருவர்— ஜயப்பிரகாஷோடு தோளோடு தோளிணைந்து தொண்டாற்றியவர். அவர் கூறுகிறார்—நீண்ட விளக்கத்துடன் 'பாதை தவறுகின்றனர்!' என்பதாக!

அது மட்டுமல்ல, காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தைக் கவனித்தாலே, எவ்வளவு அதிருப்தியும் ஆத்திரமும், உறுப்பினர்களிடையே நிலவுகிறது என்பது வெளியாகும்.

✲

பேச்சாலோ அல்லது பெரிய அறிக்கைகளினாலோ ஒரு பெரிய அரசியல் கட்சியை நிர்வகித்துவிட முடியாது. 'முற்போக்கு' என்ற பெயருக்கு இலாயக்குள்ளதாக ஆக வேண்டுமானால் சிறிதளவாவது முற்போக்குப் பாதையில் நடக்கவேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் இருக்கவேண்டும்.

ஆனால் கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பிலிருக்கும் ஜயப்பிரகாஷரோ, கீதையின் மேன்மை, இறந்துபோன ரமணரின் திறமை, தேசியம் என்பதில் பொதிந்து கிடக்கும் பெருமை, காந்தீயக் கொள்கையின் அருமை, ஆகியவைகளைக் கலந்து 'பஞ்சாமிர்தம்' செய்கிறார்— பலனையும் பொறுப்பையும் உணர வேண்டியவர் "மார்க்ஸிசத்துக்கும் காந்தீயத்துக்குமிடையே" ஒரு சமரச சன்மார்க்கம் காணப்போவதாக அறிவிக்கிறார்!

'தேசியம்'—என்ற வீண்சொல்லை விளையாடி வெற்றிபெற்ற, காங்கிரஸ் கோட்டை சரிவதைக் கண்டும் 'இந்திய தேசியத்தை ஏற்படுத்துவதே' தமது இலட்சியம் என்று கூறுகிறார் —மாகாணப் பற்றுக் கூடாதாம்!! மொழிப் பற்றும் கூடாதாம்!!

இந்தியா — பல இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை அறியாதவரல்ல அவர். 'தேசிய கீதம்' செய்த திருவிளையாடல்களால் மக்க

ளிடை வளர்ந்து வரும் அதிருப்தியை அறியாதவரல்ல. நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி வலுத்து வருவது தெரியாதவரல்ல இருந்தும் 'காங்கிரஸ் எதேச்சாதிகார பீடம்' எந்தப் பிரச்சார முறையிலீடுபட்டிருக்கிறதோ, அதே பாதையைப் பின்பற்றுகிறார்—சூழ்நிலைக் கேற்பக் கட்சியை நடத்திச் செல்லவேண்டும் என்று அறிவுரை கூறும், இவர்!

X X X

தென்னாட்டைப் பொறுத்த மட்டில், மக்கள் வாழ்வின் கேடுகளைக் களையும் இலட்சியத்தைக்கொண்டு திராவிடரியக்கத்தாராகிய நாம் பணியாற்றி வருகிறோம். நமது பணி—அரசியல் வேட்டையல்ல; சந்தர்ப்பக் காற்றும் அல்ல. நாம் நிலையான தென்றல், உலராத ஊற்று, குறையாத குன்றம்—நமது பணி!

ஆகவே, நமது இலட்சியத்துக்கு ஊறு செய்யும் வகையில் எத்தகைய முற்போக்குக் கொள்கைகளைப் போர்த்திக்கொண்டுக் கிளம்பினாலும், அவர்கள் முடிவில், முதுகைத் திருப்பத்தான் நேரும்!

பசுத் தோல் போர்த்திய புலிகளைப் பார்த்துப்பழகிவிட்டவர்கள் நாம்—பசுக்களோடு நட்புக்கொள்வதில் நமக்கொன்றும் நஷ்டமில்லை; ஆனால் பகல் வேடதாரிகள் என்றால் சிறிது பயம் கலந்த உஷாரோடு இருக்கத்தான் இருப்போம்.

சோஷியலிஸ்டு கட்சி—பலம் பொருந்திய முற்போக்குக் கட்சியாக ஆகட்டும்—வடநாட்டில் வாழும் ஏழை எளியதுகளின் இன்னல் தீர்ப்பதைத்தனது இலட்சியமாகக் கொள்ளட்டும்!

ஆனால் முற்போக்குக் கட்சியென்ற பெயரால் உரிமை கோரி நிற்கும் ஒரு மாபெரும் சமுதாயத்துக்குள்—பசுத்தோல் போர்த்தி நுழைய வேண்டாம்-அது பலனளிக்காது!

X X X

'சென்னை'—சோஷியலிஸ்டுக் கட்சியின் சோகக் கதைகளைப் பகிரங்கமாக்கி யிருக்கிறது. தலைவர்களிடை எத்தகைய 'சூழ்நிலை' உதயமாகி, வளர்கிறது என்பதை எல்லோருக்கும் விளக்கியிருக்கிறது. எனினும் சிறு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது—இதுவரை பொதுக் காரியதரிசியாக இருந்த ஜெயப்பிரகாஷுக்குப் பதில் அசோக்மேத்தா அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

பொருளாதார நிபுணத்துவமும் ஏழைகளின் கண்ணீரும் — அறிந்த இளைஞர் அவர்! ஆகவே, வடநாட்டில் வளரும் பாசிசத்தையும் முதலாளித்துவ எதேச்சாதிகாரத்தையும் முறியடிக்கும்வகையில் கட்சியை வளர்க்கட்டும்!

உரிமை கோருவோரின் ஒத்துழைப்போடு, உண்மை உணர்ந்து, வீண்பெருமைக்கு இரையாகாத, காங்கிரஸ் பலிபீடத்தைக் கலைக்கும் வகையில், வளரட்டும்!

✲

## திருடர்கள் இராஜ்யம்

6-ம் பக்கத் தொடர்ச்சி

எய்த்தது சரியே...இந்தக் கருத்துகள் அடங்கிய வரிகளை அடிக்கடி ஒரு உணவுக் கடையிலுள்ள 'கிராமபோன்' பெட்டி அலறிக் கொண்டிருக்கும். அதை மனப்பாடம் செய்துவிட்டேன். பாட்டைப் பாடுவேன். பிச்சை கொடுக்க நினைப்பவரும், எச்சிலை உமிழ்ந்து விரட்டுவர். பசியை விட, அந்த பாட்டிலே எனக்கு ருசி தட்டிவிட்டது. ஆகவே அந்தப் பாட்டை விடவே இல்லை. என் தொண்டை 'மக்கர்' செய்யும்—எதுகை, மோனை எதுவுமில்லாவிட்டாலும், அந்தக் கருத்துள்ள அடிகளை என் இச்சைபோன போக்கில் பாடிக்கொண்டேயிருப்பேன்.

ஒருநாள்—இரவு! நல்ல இருட்டு, மழைவேறு சிறுதூறலாக இருந்தது. ஒரு மாடிவீட்டு வெளியில் படுத்திருந்தேன். நான் படுத்திருந்த திண்ணையின் எதிர்ப்புறத்தில் ஒரு ஆசாமி தூங்கிக்கொண்டிருந்தான்.

நேரம் வளர்ந்து கொண்டே போயிற்று. திடீரென்று நான்கைந்து தடியர்கள் அவனைத் தாக்கினர். அவன் 'ஐயா கொள்ளை, கொள்ளை, ஐம்பதினாயிரம் போச்சே, திருடர்கள் எடுத்துச் செல்லலாச்சே' என்று ஒப்பாரியிட்டான். அந்தத் தடியர்கள் மாடிவீட்டின் உட்புறமாகவே ஓடினர். எனக்குச் சந்தேகம். ஆகவே சத்தமின்றி அவர்கள் பின்னாலேயே சென்றேன். அந்த வீட்டுக் குடையான் வெளிச்சத்தில் திருடிவந்த பணத்தை எண்ணிக்கொண்டிருந்தான். எனக்கு ஆத்திரம் எல்லையைக் கடந்து விட்டது.

"அடே, திருட்டுப்பயலே" என்று கூவினேன். அவ்வளவுதான்; என்னைப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டார்கள்.

"விடிந்தது. வீட்டில் ஒரு பெண்—பதினைந்து வயது நிறைந்த பக்குவமான பாவை—என்னைப் பார்த்தாள்,"

"ஆ, நாதா அந்த ஆள் நீங்கள் தானா?"

"அன்று உன் கண்களிலே வழிந்த கனிவை, உன் உதடுகளிலே ஒழுகிய தேனினிமையை என்னால் என்றுமே மறக்க முடியுமா? என்னை எவ்வளவு பரிவோடு விசாரித்தாய். தப்பியோட வழி செய்வதற்குள், அந்த முரடர்கள் போலீசிடம் பிடித்துக் கொடுத்து விட்டார்கள். சிறை வாழ்வு முடிந்ததும் நேராக உன்னைத் தேடிபோடி வந்தேன், நல்ல வேளை கிடைத்தாய்"

"காதலா, கதை வெகு சுவாரஸ்யமாக இருக்கிறதே!"

"இன்னும் முடியவில்லை, இருளிலேயே இருளாய் இருந்து இன்பந் தரும் எழிலணங்கே, சிறையிலே நான் ஒரு சிந்தனைசாலியானேன். வெளியில் சென்றால் என்ன செய்வது என்று யோசித்தேன்—இரவு, பகலென்று பாராமல்! உழைக்க மனமிருந்தும், உழைப்பைபெற்று ஊதியம் தர ஒருவரும் முன்வரவில்லை. பணத்தைவைத்துப் பூட்டுகிறான், ஒருவன், பசியோடு ஒருவன் ஒட்டிய வயிறைக் காட்டுகிறான். பட்டாடையுடுத்தி, பகட்டான வாழ்வு வாழ்கிறான் ஒருவன், பழைய கிழிந்த கந்தலின்றி அழுகிறான் மற்றொருவன், விருந்துண்டு செரிக்க மருந்துண்கிறான் ஒருவன், விலாவலிக்க சோற்றுக்குக் கூவுகிறான் வேறொருவன். ஏன்? ஒருவனது சொந்தத் தேவைக்குமேல், அவனிடம்பொருள் ஏன்? இப்படித் தத்துவங்களில் தத்தி விளையாடிக் கொண்டிருந்தது என்மனம். கடைசியில் என்னையே ஒரு முறை உற்றுப்பார்த்தேன். 'வாட்டசாட்டமான' உடலைக்கண்டு பூரித்தேன் — சரியென்று தலையை ஆட்டினேன். வெளியில் வந்தேன். இந்தத் திருடர் இராஜ்யத்தை ஏற்படுத்தி விட்டேன்" என்றான் சிங்காரம்.

"இந்த இராஜ்யம் நிலைக்குமா? சுவாமி!" என்றாள் அவள், சந்தேகத்தோடு!

"நிலைக்காதுதான் — நிலைத்து இருக்கவும் கூடாதுதான். இலாபம் என்பதே பகற்கொள்ளையென்று சொல்கிறார்கள் பொருளியல் புரட்சிக்காரர்கள். அப்படிப் பார்த்தால் வணிகன், வக்கீல், மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனும் கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறான் என்றுதான் அர்த்தமாகிறது. இந்த இராஜ்யத்தை அழிக்க ஒரு அணுகுண்டு இருக்கிறது, அது பொருளியல் சமத்துவம் — இல்லையென்று ஒருவன் ஏங்குவதும், அதிகம் குவித்திருப்பதை நாளும், அயலான் கொண்டுபோய்விடுவானோ என்று அஞ்சி அஞ்சித் தூங்குவதுமான நிலை ஒழிக்கும் நேர்மைத்திட்டம் இது!"

"சரி, சிங்காரி நீ, தூங்கு இன்று என்கடைசிப் படையெடுப்பு—போய் விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே நடந்துவிட்டான், அவள் விடையை எதிர்பார்க்காமலே!

X X X

சிமானின் மாடிவீட்டினுள் கொஞ்சமும் அச்சமின்றிச் சென்றான், தன்னந் தனியாக. ஒரு அறையினுள் நுழைந்தான். அங்கு ஒரு சிறுவன் தூங்கிக்கொண்டிருந்தான். கைகளைத் தட்டினான், இலேசாக. அவனது ஆட்களில் இருவர் வந்தனர். அந்தச சிறுவனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டனர்.

சிமானின் அறைக்குள் நுழைவதற்குள் இரண்டு வேலைக்காரர்கள் விழித்துக்கொண்டு ஓடிவந்தனர், எதிர்த்தனர். இரண்டொரு நிமிடங்களில் அடிதாங்காமல்மடங்கி, மயங்கி விழுந்து விட்டனர். இந்தச் சச்சரவு நடக்கும்பொழுதே சிமான் விழித்துக்கொண்டார். அவரால் எதையும் செய்ய முடியவில்லை!

"விசாரணைக்கு வந்து சேரவேண்டும், திருடர்கள் இராஜ்யத்திற்கு! உம்........புறப்படு, உடனே" என்றான், கடுமையான குரலில்!

சிங்காரத்தின் திருட்டுச் சிங்கங்கள், அகப்பட்டவரை சுருட்டிக் கொண்டு புறப்பட ஆயத்தமாகி விட்டனர்.

இருள் மாதேவிக் கோயிலின் வழியாக வரும்பொழுது, சிமான், நடு நடுங்கிய குரலில் கேட்டார். சிங்காரம், இடி முழக்கம் போலச் சிரித்தான்.

"என்னை, என்ன என்ன செய்யப் போகிறீர்கள்?"

"விசாரிக்கப் போகிறோம்!"

"திருடர்கள் நீங்கள், பறிகொடுத்தவனை விசாரிப்பதா?"

"உம், வாயை மூடும்; நாளை வழக்கு மன்றத்திலே கேளும் இந்தக் கேள்வியை!" என்றான் சிங்காரம்.

சிமானைக் கொண்டு போய் ஒரு சிறையில் தள்ளிவிட்டு அவரவர் இடங்களுக்குச் சென்று விட்டனர்.

X X X

வழக்கு மன்றம் வழிய வழிய மக்கள் கூடியிருந்தனர். வீரர்களும், விவேகிகளும் நிறைந்திருந்தனர். சிங்காரம் வந்து சிங்கார ஆசனத்தில் அமர்ந்தான். அவன் தேவியும் வந்தாள்.

"கொண்டுவா, குற்றவாளியை!" என்று கட்டளை பிறந்தது. ஆள் பறந்தான்.

சிமானை இழுத்து வந்தனர்...

"ஐயோ..." கூவினாள், இராணி. சிரித்தான் மன்னன் சிங்காரம்.

"அவர் என் தந்தை வஞ்சகப் பிள்ளை!" என்றாள் அவள்.

"தந்தையாக இருக்கட்டுமே — தவறு செய்தவரை விட்டுவிட முடியுமா? இது விசாரணை மண்டபம். ஞாபகமிருக்கட்டும்" என்று கடிந்து கொண்டான்,

குற்றப் பத்திரத்தை ஒருவன் படித்தான்...இந்த வஞ்சகப் பிள்ளையின் பழைய நாள் சரித்திரத்தில் ஒரு ஏடு கூறும் கதை இது. ஐம்பதினாயிரம் ரூபாய் பணத்துடன் வந்த ஒரு வழிப்போக்கன் உதவி கேட்டபோது, வீட்டிற்கு வெளித்தாழ்வாரத்தில் படுத்திருக்கச் செய்து, நள்ளிரவில் ஆட்களை ஏவி, அதனை எடுத்துக் கொண்டார். இதை எதிர்த்த பிச்சைக்கார சிங்காரம் என்ற இளைஞனை அந்தக் கொள்ளையை நடத்தியதாக நிரூபித்து அந்த வாலிபனுக்கு நல்லதொரு எதிர்காலத்திற்கு வழியமைத்தார் என்பதைப் பாராட்ட, இந்த தேசத்தவர் கடமைப் பட்டுள்ளனர். ஏன்? நம் தேசத்து மன்னர் சிங்கார பூபதி அந்தப் பழையப் பண்டாரச் சிங்காரமே!"

"ஆ, ஆ......"

எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

குற்றப் பத்திரத்தின் மற்ற பகுதி...பணத்தைத் தனி மனிதன் தேவைக்கு மேல் சேர்த்து வைத்தது, இல்லாதவர் கேட்டபொழுது எடுத்துக் கொடுக்காமல் இழுத்துப் பூட்டியது, இத்தேசத்து மன்னர் படையெடுத்தபொழுது தடுத்தது! எதிர்த்து உரையாடியது...அவன் படித்து முடிக்கவில்லை.

"போதும் — நிறுத்து, வஞ்சகப் பிள்ளையே, இதோ என் அருகில் இருப்பவள் உமது மகள் சிங்காரி"

"அப்படியா?"

"தந்தையே, மன்னிப்புக் கேட்டு விடுங்கள்"

"எதற்காக அம்மா, விசித்திரமாக இருக்கிறதே யோசனை — நான் திருடவில்லை, திருட்டுக் கொடுத்தவன்"

"நீர் சேர்த்து வைத்ததால்தானே திருடவேண்டும் என்ற எண்ணம் வந்தது. அது பெருங் குற்றம்"

"அந்தத் திருடனும் உழைத்துப் சேர்ப்பதை யார் தடுக்கிறார்கள்?"

"உழைக்க யார் இடந்தந்தார்கள்?"

"வேலை கொடுக்க முடியவில்லை!"

"அது கிடக்கட்டும், நீர் தனி ஆள் — மனைவியில்லை. மகளோ மறைந்துவிட்டாள். மகன் உண்டு. இதற்கு ஏன் உமக்கு அவ்வளவு சொத்து?"

"என்னைக் கேட்காதீர்கள் இந்தக் கேள்வியை –என்னைப் படைத்த ஆண்டவனையே கேளுங்கள்"

"அந்த ஆண்டவன் அப்பொழுது வடிகட்டின அயோக்யன். ஒருவனை உல்லாசமாக இருக்கவும், மற்றொருவன் உஞ்சிவிருத்தி எடுக்கவும் வேண்டுமென்று ஏன் படைத்தான்?"

"மன்னிக்கவேண்டும், மன்னா! உங்கள் குற்றச் சாட்டுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தண்டனையிருந்தால் சொல்லிவிடுங்கள் ஏற்றுக்கொள்கிறேன்"

"தண்டனை — உண்டு, உண்டு, தாராளமாக! என்னைச் சிறைக்கு அனுப்பினீர்கள், ஒரு குற்றமும் புரியாமலிருக்கும் பொழுதே. அதனால் தான் இந்த இராஜ்யத்திற்கு மன்னனானேன். அந்த உதவிக்காக, நான் ஒரு பேருதவி செய்யப்போகிறேன்!"

(அடுத்த பக்கத்தில்)

## அபாய அறிவிப்பு

7-ம் பக்கத் தொடர்ச்சி

நடுநிலைமை வகிப்போமெனக் கூறுகிறார்கள்—ஆனால் நடவடிக்கைகளோ அமெரிக்காவுக்கு ஆதரவாகவே இருக்கிறது.

நேருசர்க்கார் வெளிநாட்டு விவகாரங்கள் குறித்து மனம்போன போக்கில் நடக்கிறது — நிலைகெட்ட வகையில் செல்கிறது.

—இதுபோல, பலர் இந்திய சர்க்காரின் போக்குக் குறித்துக் கண்டித்து வருகின்றனர்.

உண்மையில், வெளிநாடுகளில் தூதுவர்களை அனுப்புவதில் காட்டிய அளவு சிரத்தை, அந்நாடுகளின் வியவகாரங்கள் குறித்துக் காட்டப்பட்டதா என்றால் 'சந்தேகம்'தான் பதிலாகக் கிடைக்கும்!

கொரியாப்பிரச்னையைப்பொறுத்த மட்டில்—இந்திய சர்க்காரின் ஸ்திரமற்றதன்மையைவிளக்கும்பட்டியல்:-

1. ஐக்கியநாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்துக்கு வோட்டு போடவில்லை.

2. அமெரிக்க அரசியல் தூதர், நேருவைச் சந்தித்த மறுநாள் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிப்பதாகப்பிரகடனம்.

3. கொரியாப்பிரச்னையில் மத்யஸ்தம் செய்யத் தயாரெனக்கூறியது.

4. வடகொரியரும்—தென்கொரியரும் விரும்பினால்தான் முடியும் என அறிவிப்பு.

5. பார்மோஸாத்தீவு சீனாவுக்கு உரியதுதான் எனத்தகவல்.

6. பார்மோஸாத் தீவைச் சுற்றி அமெரிக்கக் கடற்படை புகுந்தது—கொரிய உதவிக்கெனக் கூற்று.

7. தென் கொரியாவுக்கு இராணுவ உதவி அளிப்பது குறித்துச் சம்மதம்.

8. இராணுவம் எங்களிடமில்லை—அனுப்ப இயலாது எனத்தகவல்.

9. கொரியப் போரை நடத்த பூரண அதிகாரம் மக்-ஆர்தருக்குக் கொடுத்து ஐ. நா. சபையில் கொண்டுவந்த தீர்மானத்திற்கு இந்தியா வோட்டளிக்கவில்லை.

10. ரஷ்ய வெளிநாட்டுத் துணை மந்திரியைச் சந்தித்து 'இந்தியா ஏன் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்தது' என்பது குறித்து, ரஷ்யாவிலிருக்கும் அரசியல் தூதுவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்மூலம் சமாதானச் செய்திகள்.

இந்தப் பட்டியல் சிறியது; விரித்தால் நீண்டுகொண்டே போகும். ஒன்றுக்கொன்று நேர் முரண்! இருந்தும், 'இதுதான் இவர்கள் ராஜதந்திர'மாகப் பரிணமிக்கிறது!

அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில், ஆப்த நண்பனாக நடந்து கொள்ள வேண்டுமே என்ற ஆசையின் காரணமாக கொரியப் பிரச்னையில் இந்தியாவையும் ஈடுபடுத்தினர்.

இப்போது, தங்கள் முடிவு குறித்து கண்டனங்களும் குறைபாடுகளும் கொந்தளித்துக் கிளம்பியதும் 'முரண்பாடுகளை' விளக்கங்களாக வெளியிடுகின்றனர்.

ரஷ்யாவைச் சமாதானப்படுத்துவதுபோல ஒரு நடவடிக்கையும்—அமெரிக்காவைத் தாஜா செய்வதுபோல இன்னொரு உத்தரவும் பிறப்பிக்கின்றனர்!

வேடிக்கையான காட்சி—ஸ்திர புத்தியில்லாததின் விளைவு! திறமை அஸ்தமித்துப் போனதால் விளைந்த விபரீதம்!! முதலாளித்துவ மோகினிக்கு ஆட்பட்டதால் ஏற்படும் அனர்த்தம்!!!

X X X

கொரியாப் பிரச்னையில் உடனடியாகத் தலையிட்டிருக்க வேண்டியதில்லை — ராணுவ உதவியனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்துக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டியதில்லை.

எனினும் அமெரிக்கத் தொடர்பால் இந்த இக்கட்டுக்கு இரையாயினர்—இந்திய சர்க்கார்.

இப்போது, அவசரப் புத்தியின் விளைவுகள் 'அபாய அறிவிப்பு'களாகக் காட்சி தந்ததும் திகைக்கின்றனர் — தினசரி முரண்பாடான விளக்கங்களை வெளியிடுகின்றனர்.

அமெரிக்காவின் போக்கு — அடுத்த உலக யுத்தத்தின் முஸ்தீபுதான் என்பது விளக்கமாகி வருகிறது. அதற்கான ஏற்பாடுகளையும் அமெரிக்கா செய்துகொண்டே வருகிறது.

இந்நேரத்தில் இந்தியா — தன் கௌரவத்தை நிலை நாட்டிக் கொள்ளச் சந்தர்ப்பமிருக்கிறது. போருக்குப் பீடம் அமைக்கும் போக்கைக் கண்டித்து, போர் விரும்பாத நாடுகளின் ஆதரவைத் திரட்டவேண்டும். கொரியாப் பிரச்னையில்அமெரிக்காவின் அதிசிரத்தை கலந்த தலையீட்டைத் தடுத்து அங்கு வாழும் மக்களின் விருப்பத்தைக் கண்டு, அதன்படி செய்யவேண்டும்.

ஆசியாவிலிருந்து ஐரோப்பிய ஆதிபத்தியத்தை விரட்டுவதுதான் தங்கள் இலட்சியம் என்று எத்தனையோ தடவை வீர முழக்கம் செய்தவர், நேரு!

இப்போது உலகுக்கு நன்மை நல்கும் இந்த உருப்படியான பணியைச் செய்வாரா? அல்லது அமெரிக்க மோகினிக்கு ஆட்படுவதும் — பின் அது ஆபத்து என்று உணர்ந்ததும் திகைப்பதுமாகத்திண்டாடுவதையே கொள்கையாகக் கொள்வாரா?

கேள்விகள், நம் இதயத்திலிருந்து மட்டுமல்ல; இந்திய சுபீட்சம் விரும்பும் எல்லோரது இதயத்திலிருந்தும் எழும்புபவை.

(முன் பக்கத் தொடர்ச்சி)

"அடடா, கொண்டுவா அந்தச் சிறுவனை"

சிறுவன் வந்தான்.

"என் தம்பி ஏகாம்பரம்"

"சிங்காரி, உன் தம்பி மட்டுமா, என் மைத்துனன்"

"மாமனாரே, ஆச்சர்யமாக இப்படி ஏன் பேசுகிறீர்? இவனை எங்கள் கள்ளக் கல்லூரியில் சேர்க்கப் போகிறோம். உமது குற்றத்திற்கு ஒரு தண்டனை. நானும், உமமகள்—ஆம், என் மனைவியும் வானப் பிரஸ்தம் கிளம்பப் போகிறோம், இந்த நாட்டைவிட்டே! அதற்கு உமது தேசத்தில் ஒரு நல்ல தொழில் செய்ய வழி காட்டவேண்டும்"

"சிங்கார பூபதியாரே, எனக்கு அளித்த தண்டனையை ஏற்கத் தயார்—இன்றே, இப்பொழுதே! தண்டனையை எப்பொழுது நிறைவேற்றுவது? சீமான் கூவினர். அந்த வழக்கு மண்டபம் அமைதியை அணைத்துக்கொண்டது!

(அடுத்த இதழில் முடியும்)

# சுழல் விளக்கு

### நல்லவர்களும் உண்டு

தென் ஆப்ரிக்க நிறவெறிக்கு எதிர்பாராத மூலையிலிருந்து எதிர்ப்பு—தென் ரொடீஷியா இன வெறிப் போக்கை ஏற்பதில்லையென்று முடிவு செய்துவிட்டது. அதன் பிரதமர் காட்பிரே ஹக்கின்ஸ், இன்னமும் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று கூறுவது போலப் பேசியிருக்கிறார். கல்வியும் தகுதியும் உள்ள ஆப்ரிக்கர்களை அவர்களது பார்லிமெண்டில் சேர்த்துக் கொள்ளாவிட்டால் ஆபத்துதான். ஏனெனில் கொஞ்சநாட்களில் வெள்ளையர்களையே ஆப்ரிக்காவிலிருந்து விரட்டியடித்து விடுவர் என்று துணிந்து உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார்.

### பேர்னாட்ஷா பேசுகிறார்!

கதாயுதம் போய், வில்லும் அம்பும்போய், ஈட்டிபோய், வாள்போய்............அணுகுண்டு வரும்வரை ஆயுதங்களைத் தடை செய்யுங்கள் என்ற குரல் ஒலித்துக்கொண்டுதானிருக்கிறது. ஒவ்வொரு புதிய ஆயுதமும் இருதரப்பாருக்கும் பெரும் ஆபத்தைத் தரும் என்பது நிரூபிக்கப்பட்டால் தானே அவை சட்டவிரோதமானதாக ஆகிவிடும்—ஹிரோஷிமாவில் அணுகுண்டுவீசியதற்காக மந்திரிகள் தாங்கள் யுத்தக் குற்றவாளிகளென்பதை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று கோரும் சமாதானக் கோரிக்கையை தற்போதைய சர்க்கார் ஏற்குமா? சமாதான வழிகள் என்றமுறையில் யுத்தத்தை தவிர்ப்பதற்கான வழியைக் கண்டு பிடிப்பதுதான் என் வேலை — வெறும் பிரச்சாரம் செய்வதல்ல.........இப்படிக் கூறுகிறார் பெர்னாட்ஷா.

### பணத்தின் குணம்!

பசியென்பவனுக்கு ஒரு கவளம் போட யோசனை செய்திடும் கோமான்கள், காலணா எடுத்தெறிய கணக்கு பார்க்கும் கனவான்கள், வீணான காரியத்திற்கு வெள்ளிப் பணங்களை அள்ளி அள்ளி வீசுவர். ரங்கூனில் பிரதமர் நேரு இரண்டு மாலைகளை விட்டுவந்தாராம். பர்மா இந்திய காங்கிரஸ் தலைவர் தினநாத் ஏலம் விடச் சொன்னாராம். லாலா கோவிந்த் பிரஸாத், பங்கலால் ஜாமன் ஆகியோர் ரூ 9500 கொடுத்து எடுத்தனராம். பணம் படைத்தவரின் குணத்திற்கு பக்குவமான எடுத்துக்காட்டு!

### பியூன்கள் வேலை!

ஆபீஸ் பியூன்களை தங்கள் சொந்த வேலைகளுக்கு உபயோகித்துக்கொள்ளும் அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதென்று பாஞ்சால சர்க்கார் முடிவு செய்திருப்பதாக சர்க்கார் அறிக்கையொன்று பேசுகிறது! "என்ன பைத்தியக்காரத்தனமான உத்திரவு போங்கோ! இந்தப் பயல்களுக்கு இப்படிச் சொல்லிட்டா, வாலுன்னு வளர்ந்துடும். கட்டை துளிர்த்திடுமே! இனி ஆத்துக்கு காய்கறி வாங்க நானா போறது—மாட்டைக் குளிப்பாட்ட, அந்த வாண்டுப் பயலை பள்ளிக்கூடம் கொண்டுவிட, விறகு எடுத்து வீட்டு மச்சியில் அடுக்க, தூத்தம் எடுத்துக்கொண்டு வர, பாத்திரம் துலக்கிட வேறு யாரைக் கூப்பிடறது—பக்கத்தாத்துக்காரா எல்லாம் சிரிக்கமாட்டாளோ? பெரிய ஆபீசர், வீட்டு வேலைக்குக்கூட உதவாத ப்யூன்கள் என்று கேலி பண்ண மாட்டாளோ?" என்று அங்கலாய்க்கிறார், ஆபீசர் அண்ணாசாமி. "பாஞ்சாலத்திற்கு பதட்டம் — ஆனால் சென்னையில் இதெல்லாம் நடக்குமா" என்று எண்ணித் தன் மனதைத் திடப்படுத்திக் கொள்கிறார் அவர்.

### மாப்பிள்ளை தேவை!

தேவை, தேவை, உடனே தேவை! நல்ல நிலையிலுள்ள மாப்பிள்ளை தேவை—35 வயதிற்குள்ளிருக்க வேண்டும்—அழகு வழியும் சுமார்த்த கோத்திர விதவைப் பெண்ணுக்காக! வயது 24 குடும்ப வேலைகளிலும், இசையிலும் நல்ல தேர்ச்சி உண்டு. உயர் தர உத்தியோகஸ்தரின் பெண். சாதி எதுவாகவும் இருக்கலாம். தடையில்லை. தாரமிழந்தவராயினும் அட்டியில்லை.

இப்படி விளம்பரங்கள், நாளும் பார்க்கிறோம், சாதிக்கு, சாத்திரத்திற்கு, குலத்திற்கு, கோத்திரத்திற்கு 'வக்காலத்து' வாங்கும் 'இந்து' பத்திரிகையில்! காலம் இப்படி வெகு வேகமாக மாறிக்கொண்டு போகிறது. விதவையை மணக்கலாம், சாதித்தடை கூடாது என்று நமது இலட்சியங்களை ஒலி பரப்பியபோது கல்லெறிந்தவர்கள், சுடுசொல் வீசியவர்கள், வசைமாரி பொழிந்தவர்கள் இப்பொழுதாவது உணர்ந்திடுவார்களா என்று விளம்பரங்களை மட்டும் படித்துவிட்டு, தினப்பத்திரிகையைத் தூக்கியெறிந்திடும் தோழன் கேட்கிறான்.

### பார்வையிடுகிறார்!

சென்னை நிலவரி, தொழிலாளர் இலாகா மந்திரியார், கனம் சீதாராம ரெட்டியார் இம்மாதம் 12ந் தேதியன்று காரில் சென்னையிலிருந்து புறப்பட்டு மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், திருப்பாச்சூர் ஆகிய இடங்களிலுள்ள ஏரிகளைப் பார்வையிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. என்ன அக்கறை, 'நம்ம' மந்திரியாருக்கு! 'ஏரியிலே நீரில்லை, ஏழை வயிற்றுக்குக் கூழில்லை' என்று ஏற்றப்பாட்டு பாடி ஏழைத் தொழிலாளி கண்ணீரைச் சிந்தும் காட்சியை நாம் பார்க்கிறோம்—நம்மைப் போல சமான்யரா அவர், இது கண்ணில் பட! காரில் போகும் வேகத்தில் இதுபற்றியா சிந்தனை வரும். வரண்ட ஏரிகளைப் பார்க்கிறார். என்ன அநியாயம்...... கனம் முன்ஷி இதற்குத் திட்டம் போட்டு, மழையை வரவழைக்க, இளங் கன்றுகளைக்கூட நடாமல், மரங்களையே நட ஏற்பாடு செய்துள்ளார். அது வளர்ந்த பிறகல்லவா, மழை பொழியும், ஏரி நிறைந்து வழியும். அதற்குள் அவசரப்பட்டு, காரேறிப் போகிறாராமே, இந்த 'கனம்!' மழைவரும் வரை பொறுத்திருந்து, மந்திரி முன்ஷியாரின் அனுமதியும் ஆசியும் பெற்று பார்வையிடப் புறப்படுவாராக!

# அபாய அறிவிப்பு

2.

கோரிக்குதடா கோளி கொத்து
தடா கோளி
கோரியாவைக் கூறுபோட்டு
கோரிக்குதடா கோளி
கொண்டையிலே செங்கொடியைக்
குலுக்கியாட்டும் கோளி
கண்ட இடத்தில் முட்டையிட்டுக்
கலகஞ்செய்யும் கோளி

விழிக்காதீர்கள்! இத்தகைய 'கவிதை' யொன்றை புனைந்திருக்கிறார் — கொத்தமங்கலம்சுப்பு என்பவர்; 'ஆனந்தவிகடன்' இதழ் அதைப் பிரசுரித்திருக்கிறது. 'ஆழம் பாக்கிறாங்க' என்ற தலைப்புடன்.

உலகை ஆட்டிவைக்கும் கொரியப் பிரச்னை குறித்து, இந்த 'புதுயுக'க் கவிஞருக்கு ஏற்பட்ட உத்சாகம், கோளியுருவில் கொக்கரித்திருக்கிறது—இதுபோல!

கோளியா? —என்ன இது கேலி! என்று கோட்காதீர்கள். கோழி—கவிஞரின் அதியற்புத கற்பனை மகிமையால் கோளியாகியிருக்கிறது! 'தமிழ் வளர்க்கும்' அத்தகையவருக்கு, கொரியப் பிரச்னை, உலக சமாதானத்தின்மீது பாய்ச்சப்படும் கூரிய வேல் என்ற மதிநுட்பம் கலந்த உண்மைபுலனாகவே, உணர்ச்சிப் பரவசத்துடன், 'தேனினுமினிய செந்தமிழ் சித்திரவதையானாலும் பரவாயில்லை — மக்களுக்கு விஷய தானம் செய்வோம் என்ற பெரும் புத்தியுடன், தீட்டியிருக்கிறார் கோழியை—கோளியாக்கி!

சுப்புக்கு மட்டும் என்றல்ல சாதாரண அப்புக்குக்கூட, இன்று கொரியப் பிரச்னை எவ்வளவு கொடூரமாகி வருகிறதென்று தெரியும்.

தென்கொரியாவைத் தன் சதுரங்கமாகவைத்துக்கொண்டு அமெரிக்க ஆதிபத்தியம் மூன்றாவது உலகப்போருக்கான ஆயத்தத்தில் ஈடுபட்டு இன்றோடு (10—7—50) சரியாக பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன.

உலக சமாதானத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஐக்கியநாடுகள் சபை, அமெரிக்காவின் இத்தகைய போக்குக்குப் பின்பாட்டு பாடுகிறது. ஐக்கிய நாடுகள் சபையை முதலாளித்துவ ஆதிபத்யவெறியை மறைக்கும் திரையாக மூடிக்கொண்டு தீவிரமாகத் திட்டங்களைத் நீட்டிய வண்ணம்—படைகளை ஆசியா கண்டத்தில் கொண்டுவந்து குவித்து வருகிறது.

போர் நடைபெறும் இடம் கொரியா! போரிட்டுக்கொள்பவர்கள் அதே நாட்டைச் சார்ந்த இருபிரிவினர். தாயாதிகள் சண்டை போட்டுக்கொள்ளுகின்றனர். "உன்போக்கு—சரியில்லை" என்று ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு. இதில் ஏன் அமெரிக்காவுக்கு இவ்வளவு அவசரமும் ஆவேசமும் கொந்தளிக்கவேண்டும்? உலகசமாதானத்துக்காகப் பாடுபடுவதாகப் பேசித் திரியும் அமெரிக்கா இத்தகராறைத்தீர்த்து, சமரசம் காண்பதற்குப் பதில், ஏன் தனதுபடைகளை அனுப்பவேண்டும்.

தென்கொரியாவுக்காக அமெரிக்க விமானங்கள், அமெரிக்கஇராணுவம் எல்லாம் போரிட அனுப்பப்பட்டிருக்கின்றன,

கடந்த 7-ந்தேதி யன்று அமெரிக்காவில் கட்டாய இராணுவச்சேவைச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது—ஜனாதிபதி ட்ரூமனால்.

இவ்வளவு மும்முரமாக அமெரிக்கா, கொரியப்போரை மூன்றாவது உலக யுத்தமாக்கிவிடத், திட்டமிட்டு வருகிறது. ரஷ்யாவை — போருக்கிழுக்கிறது! உலக மக்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு முதலாளித்துவம் கம்யூனிசத்தை எதிர்க்கக் கச்சை கட்டுகிறது.

இந்தப்போக்கை, எங்கெங்கு முதலாளித்துவத்துக்கு ஆட்பட்டு ஆட்சி நடைபெறுகிறதோ அந்த நாடுகள் எல்லாம் ஆதரிக்கின்றன.

அகில உலகுக்கும் செய்திகளைத் தரும் ஸ்தாபனம் அமெரிக்க முதலாளிகளின் கையில் இருக்கும் காரணத்தால் கொரியப்போருக்கு மூல காரணம் ரஷ்யாவும் — வடகொரியாவும்தான் என்ற செய்தியைப் பிரபலமாக்கி வருகின்றன,

எனினும் போர் துவக்கப்பட்டு இத்தனை நாட்கள் ஆகியும் ரஷ்யாவிடமிருந்து இந்தப் போருக்கும் தங்களுக்குமுள்ள சம்பந்தம் குறித்து ஒரு சிறு தகவல் கூட வெளிவரவில்லை. ரஷ்யாவின் படைகள் கலந்துகொண்டதாகவோ செய்திகள் எதுவும் இவர்களால் தரப்படவில்லை.

அமெரிக்கா போர் முரசம் கொட்டுகிறது — ரஷ்யாவோ கேலி செய்வது போலப் பேசாது இருக்கிறது!

இருந்தும் முதலாளித்துவப் பிரசாரப் பீரங்கிகள் ரஷ்யாவின் மீது பாய்கின்றன. இந்தியாவிலுள்ள தேசிய இதழ்களும், ரஷ்யாவைத் தாக்கி எழுதுகின்றன. அதையொட்டியே 'ஆனந்தவிகடனும்' கொண்டையிலே செங்கொடியைக் குலுக்கியாட்டும் 'கோளி'-கொரிக்குதடா என்று வெளியிட்டிருக்கிறது. ரஷ்யாவின் மீது குற்றஞ்சாட்ட, முதலாளித்துவ நாடுகள் தயங்கவில்லை. அவைகளுடன் கூட்டுறவு கொண்டுகிடக்கும் இந்திய சர்க்காரும், இங்குள்ள தாட்களும் அதே 'பாணி'யைப் பின் பற்றுகின்றன.

ரஷ்யா — தனது பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்பக் கையாளும் முறைகள் குறித்து, நம் போன்றார் அப்போதைக்கப்போது குற்றங் குறைகளைக் கூறியே வருகிறோம்.

'மாஸ்கோ கோக்கி'களாக ஒவ்வொருநாட்டிலுள்ளகம்யூனிஸ்டுகளையும் ஆக்கிவிட்டு, தனது உத்தரவுப் பிரகாரம் நடப்போர்களாக அவர்களைத் தயாரித்து வருகிறது.

கம்யூனிசம் வேறு — கம்யூனிச ஆதிபத்தியம் வேறு. உழைத்து வாழ்வோன் இதயம் உலைக்கூடமாக ஆகி, அவன் உயர்வதற்கான வழிவகைகள் காணப்படவேண்டும் என்ற உயரிய கொள்கை — இன்று ஆதிபத்தியப் பாதையாக மாறி வருகிறது.

ரஷ்யா—கம்யூனிசத்தின் மூலம் ஒரு ஆதிபத்தியத்தை ஸ்தாபிக்க முனைகிறது. 'எங்கும் கம்யூனிசம்!' என்று கூறியவண்ணம் 'மாஸ்கோ நோக்கி'களைத் தயார் செய்து வருகிறது. வெறியோடு வேகமான வகையில் பற்பல நாடுகளில் பலாத்காரங்கள் தலைதூக்க அனுமதித்து வருகிறது.

ரஷ்யாவின் இந்தப் போக்கு குறித்து பொதுவுடைமைக் கொள்கையில் நம்பிக்கையும், ஆர்வமும் கொண்ட பற்பல அறிஞர்கள் அடிக்கடி கண்டனக் குரல் எழுப்பியே வருகிறார்கள்.

கம்யூனிசம் பரவவேண்டும் என்று காரணமாகக் கூறி, ரஷ்யா கம்யூனிச ஆதிபத்தியத்தின் (Communist imperialism) கேந்திர ஸ்தானமாக இருக்க ஆசை கொள்கிறது—என்று கூறி வருகின்றனர்.

இக்கூற்றை நாமும் மறக்கவோ, மறைக்கவோ விரும்பவில்லை.

ரஷ்யா—கம்யூனிசத்தைக் காரணமாகக் கொண்டு தானிட்ட கட்டளைப்படி ஆடும்படி நாடுகளை ஆக்கத் திட்டமிட்டே, வேலை செய்து வருகிறது. இந்தப் போக்கு, தேவையா அல்லது வேண்டாமா என்பதல்ல நமது கேள்வி—அமெரிக்க முதலாளித்துவம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட எவ்வளவு தீவிரமாக வேலை செய்கிறதோ அதேபோல ரஷ்யாவும் முயற்சிகளைச் செய்து வருகிறது என்பது முழு உண்மை.

இத்தகைய முயற்சிகளின் விளைவாக பொதுவுடைமை மயமான நாடுகள் யாவும் அதன் கூடாரத்தில் தங்கியிருக்கின்றன — யுகோஸ்லோவேக்யா என்ற ஒரு நாட்டைத் தவிர!

பலாத்காரம், அட்டகாசம் ஆகியவைகளின் மூலம் இலட்சியக்கனவை நனவாக்கும் ஆசையை ஆங்காங்குள்ள நாடுகளில் இயங்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மூலம் சிருஷ்டித்து வருகிறது—ரஷ்யா.

இத்தகைய இக்கட்டுக்கு, இங்குள்ள சூழ்நிலைகளை வைத்துக் கவனிக்காமல் இந்தியக் கம்யூனிஸ்டுகளும் ஆட்பட்டுவிட்டனர். பலாத்காரம், சதி போன்ற மோசமான பாதையில் நடந்து மக்களிடையில் மகத்தான வெறுப்பைப் பெற்றுவிட்டனர்.

கம்யூனிஸ்டுகளின் பலாத்காரப் போக்கால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதியையும் பயத்தையும் காட்டி, தனது கட்சிக்கான பேராதரவைத் திரட்டும் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக் கொள்வதில் முனைந்து வருகிறது—அமெரிக்கா.

அதை யொட்டியே அமெரிக்காவின் மோகனவலையில் ஆட்பட்டுக் கொண்ட நாடுகளும் கம்யூனிஸ்டுகளின் பலாத்காரப் போக்கைக் கண்டிடபதுபோல, மக்களிடையில் கம்யூனிசம் என்றாலே ஒரு வெறுப்பைச் சிருஷ்டிக்க முனைந்து வருகின்றனர். ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டுகள் ஆங்காங்கும், குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வருகின்றனர். இந்தோசீனா, இந்தோனேஷியா, பர்மா, மலேயா, இந்தியா—பாகிஸ்தான், இலங்கை முதலான நாடுகள் கடந்த போருக்குப் பின் புதுநிலை பெற்றவையாகும்.

குறிப்பாக இந்தியா — இந்தோனேஷியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை போன்றவைகள் ஐரோப்பிய ஏகாதிபத்யப் பிடியினிருந்தும் விடுபட்டு சுதந்திரம் பெற்ற தேசங்களாகும்.

புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளில் சுயராஜ்யம் பெறப் போரிட்ட கட்சியினர் வசமே ஆட்சியும் அதிகாரமும் கைமாறியது.

ஆட்சியும் அதிகாரமும் விடுதலை முரசு கொட்டி, வெற்றிபெற்ற வீரர்கள் வசம் சென்றதைக் கண்டு, அந்தந்த நாடுகளிலுள்ள முதலாளிகள், அந்தக் கட்சியினரைத் தங்களது நண்பர்களாக்கிக் கொள்ள முயன்றனர்.

இந்தியா—சுதந்திரமடைந்து சுயராஜ்ய சர்க்கார் நிறுவப்பட்டதும் இங்குள்ள முதலாளிகளில் பலர் காங்கிரஸ்காரர்களாயினர்!

வெள்ளையன் ஆண்டபோது கோட்டும்சூட்டும் அணிந்து, கொடிக் கம்பத்தில் யூனியன் ஜாக் பறக்க, பெயருக்கு முன்னால் பிரிட்டிஷார் தந்த 'சர்' பட்டம் இருக்க, 'ஜாலி'யாக இருந்த, பணம் பெருத்தான்கள் புதுக்கோலம் பூண்டனர்!

கோட்டும், சூட்டும் போய், கதராடை அணிந்தனர் — யூனியன் ஜாக் பறந்த இடத்தில் காங்கிரஸ் கொடி கட்டப்பட்டது.

சமயத்துக் கேற்றபடி தக்கவேஷம் போடுவதுதானே முதலாளித்துவத்தின் போக்கு. ஆகவே, தக்கோலம் பூண்டனர்! பணம் பெருத்தான்கள் என்றுமில்லாத வகையில் நேருவைப் போற்றியும் பட்டேலைத் தரிசித்தும் தங்களுக்கு தேசத்தின் மீதுள்ள 'அபாரக் காதலை'க் காட்டிக்கொண்டனர். புதுவேஷம் போட்டனர்—வெற்றியும் விரைந்தது.

காங்கிரஸ் தலைவர்கள் பணம் பெருத்தான்களின் பாவைகளாயினர் நாட்டை ஆட்டிவைக்கும் ஒரு வலுப்பெற்ற சக்தியாக இந்திய முதலாளித்துவம் உருவாயிற்று — சுமார் [illegible]0 முதலாளிகள் இந்தியாவின் முடிசூடா மன்னர்களாக ஆயினர். மறைந்து நின்று ஆட்சியை ஆட்டிப்படைக்கும் சூத்ரதாரிகளாக ஆயினர் —காங்கிரஸ் ஆட்சிப் பீடத்துக்கு வந்த சிலகாலத்துக்குள்.

காங்கிரஸ் கட்சி — சுதந்திரப் போர் குறித்து அதிக கவனம் செலுத்தி வந்ததால், தன்னிடம் நாட்டுக்கான நல்ல பொருளாதார, சமுதாய முன்னேற்றத் திட்டங்களைக் கொண்டில்லை. தீவிரமாகப் பணியாற்றும்—சூழ்நிலையிலும் இல்லை! ஆகவே சுதந்திரம் பெற்றதும் புயலில் சிக்கிய படகுபோல எப்படியாவது ஆட்சி இயந்திரம் இயங்கினால் போதும் என்ற அளவுக்கு வந்தது.

புதிதாகப் பெரும்பொறுப்பேற்றதால் ஏற்பட்ட சங்கடங்கள்—போருக்குப்பின்னால் நாட்டிலேற்பட்டிருந்த மோசமான சூழ்நிலை, எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதாரச்சிக்கல் ஆகிய பெரும் பொறுப்புகளையேற்று சமாளிக்கவேண்டியவர்களாயினர்.

தொல்லைகளை சமாளிக்கும் துணிவில்லாததால் நாட்டிற்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றிப்பண உதவிக்குத் திண்டாடவேண்டி ஏற்பட்டுவிட்டது.

இந்தச் சூழ்நிலையை வெகு விரைவில் இந்திய முதலாளித்துவம்சாதகமாக்கிக்கொண்டது—அமெரிக்க

முதலாளித்துவ ஆட்சியும், தனது நஞ்சு கலந்த ஆசைச் சொற்களால் இந்தியாவின் 'ஆப்த நண்பன்' என்று கூறும்படி நடிக்கலாயிற்று.

வளர்ந்து வரும் பொதுவுடைமையைத் தகர்த்தெறியத் தனக்கொரு நல்ல சகா கிடைத்தது என்று குதூகலிக்கத் துவங்கியது.

நாடாளவந்தவர்கள், சுதந்திரத்துக்காகப் போராடியபோது பலகாரியங்களைச் செய்யப்போவதாக வீர கர்ஜனை செய்தவர்கள் — ஆகவே, மக்கள் பல நன்மைகள் மலரும் என்று எதிர்நோக்கினர். ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்தது.

இதனால் எங்கே தங்களுக்குக் கெட்டபெயரும், தங்கள் கட்சிக்குக் கேடும் சூழ்ந்து விடுமோ என்று அஞ்சிய ஆளவந்தார் சில்லரைகளைப் பெரிதாக்கி மக்கள் மனதை அப்பக்கம் திருப்பிவிடும் திருப்பணியில் இறங்கினர்.

'என் செய்வோம்! இப்போது நாடு இரண்டாகி விட்டதால் அகதிகள் பிரச்னை வளர்ந்து விட்டதே, என்றனர்.

'ஐயகோ! காஷ்மீர் தகராறைக் கவனியுங்கள். ஐதராபாத்தின் அட்டகாசத்தைப் பாருங்கள்' என்று கூவினர்.

'அடுக்குமோ இந்தக்கம்யூனிஸ்டுகளின் செயல்—அடாது செய்கிறார்களே!' என்று அழுதனர்.

சந்தர்ப்பத்துக் கேற்றவாறு பற்பல பிரச்சினைகளைச் சிருஷ்டித்து வந்தாலும், எப்போதும் திருப்பித்திருப்பி ஒரே பல்லவியைப் பாடமட்டும் தயங்கவில்லை. 'நாட்டில் நாச சக்திகள் வளர்ந்துவிட்டன. கம்யூனிஸ்டுகளை ஒடுக்கி, மக்களைப் பலாத்காரப் பாதையிலிருந்து காப்பாற்றப்படாத பாடுபடவேண்டியிருக்கிறது. என் செய்வோம்?' என்பது தான் அது. இத்தகையக் குற்றச் சாட்டுக்கு, 'மாஸ்கோ காட்டிய வழி'யில் நடந்த இந்தியக்கம்யூனிஸ்டுகளும் அருகதையாயினர்.

கம்யூனிஸ்டுப் பூச்சாண்டியைக் காட்டி, மக்களின் கோபாவேசத்திலிருந்து தப்ப முயலும் இந்திய அரசாங்கம், தங்கள் கூட்டுறவுடன் இந்திய அரசாங்கத்தை ஆட்டுவிக்கும் இந்திய முதலாளித்துவம் ஆகியவைகளைக் கண்ட அமெரிக்கா, நேருவைத் தங்கள் நேசனென்று கொண்டாடி, இந்திய விஷயத்தில் ஏராள சிரத்தைக் காட்டுவதுபோல் நடித்து—தனது முதலாளித்துவ கூடாரத்தில் ஒரு நபராக முத்திரைப் போட்டுவிட்டது.

*   *   *

'முதலாளித்துவ முகாமாயினும் சரி— கம்யூனிச கூடாரமாயினுஞ் சரி, எதிலும் இந்தியா கலந்து கொள்ளாது, தனக்கென ஒரு நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும். உலக சமாதானத்துக்காகப் பாடுபடும்' என்று, நேரு போன்றவர்கள் முரசறைந்து வந்தனர்—வருகின்றனர்.

'இது -இயலாத காரியம்! தலையைப் புலி வாய்க்குத் தந்துவிட்டுப் போதிக்கும் சமரச ஞானம்!' என்று, நாம் கூறிவருகிறோம். நேரு சர்க்கார், டாலர் ஏகாதிபத்யத்தின் தாசனாகி வருகிறது' என்று எச்சரித்து வந்துள்ளோம்.

ஆனால், அப்போதெல்லாம் நமது கூற்றை நம்ப மறுத்தோர், இப்போது தெளிவு பெறும் புதுநிலை உண்டாகியிருக்கிறது.

தென்கொரியாவுக்கு ராணுவ உதவி செய்யவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்காவின் தீர்மானத்தை நிறைவேற்றியது.

தீர்மானம் பாதுகாப்புக் கவுன்சில் கொண்டுவரப்பட்டு வோட்டுகள் எடுக்கப்பட்டபோது இந்தியாகலந்து கொள்ளவில்லை.

இந்தியா வோட்டளிக்கவில்லை என்பது அறிந்ததும் அமெரிக்காவில் பலர் வருந்தியதாகச் செய்திகள் வந்தன. அமெரிக்க மிதவாதிகள் தலைவர் பிரான்சிஸ் பிடில் என்பவர் தான் ஏமாற்றமடைந்ததாக அறிவித்தார். இந்தியா அமெரிக்காவுடன் சேர்ந்து வடகொரியாமீது நடவடிக்கை யெடுக்கும் என்று நம்பியதாகவும் ஆனால் இந்தியா வோட்டளிக்காதது காண வருந்துவதாகவும் பெரிய அறிக்கையொன்று வெளியிட்டார்.

வடகொரியாப் போரை நிறுத்த வேண்டும் என்பதாகப் பிரரேபிக்கப்பட்ட தீர்மானத்துக்கு இந்தியா வோட்டளிக்காதது குறித்துப் பற்பல சந்தேகங்கள் உதயமாயின.

'காரணம் எதுவுமில்லை! அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கு மிடையே தந்திப் போக்குவரத்தில் சிறிது சங்கடமேற்பட்டு விட்டது. ஆகவே தான் இந்திய சர்க்கார் தங்களது பிரதிநிதியான சர் பி. என். ராவுக்குத் தகவல் அனுப்ப முடியவில்லை' என்று நேரு இலாகா அறிவித்தது.


ஆனால், மறுதினமே ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாக இந்தியா பிரகடனம் செய்தது.

இந்தப் பிரகடனம் செய்யப்படுவதற்கு முதல் நாள், அதாவது ஜூன் 29-ந் தேதியன்று புது டெல்லியில் ஒரு முக்கிய சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது.

இந்தியா வோட் எடுப்பில் கலந்து கொள்ளாத செய்தி கேட்டதும் அமெரிக்காவின் அரசியல் தூதராக இந்தியாவிலிருக்கும் லாய்ஹெண்டர்ஸன் நேரு மாளிகைக்குச் சென்று நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தாராம்!....

கொரியப் போரில் அதிசிரத்தை காட்டுவது அமெரிக்கா—கொரியப் போர் குறித்த வாக்கெடுப்பில் ஆசியாவில் முக்கிய நாடான இந்தியா கலந்து கொள்ளவில்லை—உடனே அமெரிக்க அரசியல் தூதர் இந்தியப் பிரதமரைச் சந்தித்திருக்கிறார்—மறு நாள் இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிப்பதாகப் பிரகடனம் வெளிவந்திருக்கிறது!

இந்நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கினால் சூட்சமம் விளங்கும்—அமெரிக்க அரசியல் தூதர் நேருவைச்



சந்தித்து என்ன கூறியிருப்பார் என்பதை யூகிக்க முடியும்.

X X X

"வீண் பிரதாபம் பேசிக்கொண்டு வீழ்கின்றனர்!"

"பண மோகினியின் பாதத்தில் போய் சரணடைகின்றனர்—விளைவு விபரீதமாகும்!"

"அமெரிக்காவை ஆப்த நண்பன் என்று கருதுகிறது நேரு சர்க்கார்—அது சிரித்திடும் சிலந்தி!"

"கடன், கடனுக வாங்குகின்றனர், அமெரிக்காவிடமிருந்து—இது, இந்தியாவை அமெரிக்காவிடம் ஈடுவைப்பதாகும். முதலாளித்துவ வலையில் வீழ்வதாகும்!"

"நல்லதல்ல இப்போக்கு—நாடாள வந்த நாயகர்கள், இப்படி நடப்பது நல்லதல்ல."

இதுபோன்று, நாம் எச்சரித்து வந்துள்ளோம். நிலையான வெளிநாட்டுக் கொள்கை இருக்கவேண்டும். வீண் பெருமையை எண்ணிக்கொண்டு, அவசரத்துக்கு ஆட்பட்டு விபரீத நடவடிக்கைகளில் ஈடுபடுவது நல்லதல்ல என்றெல்லாம் நாம் எடுத்துக் காட்டியபோது எரிந்து விழுந்தனர்—'இதுகளுக்கு என்ன வேலை? எமது நேருவுக்கு—அமெரிக்கா தரும் வரவேற்பு கண்டு அசூயை கொள்கின்றனர். அது தான் உளறுகின்றனர்' என்று ஆர்ப்பரித்தனர்.

"யாருக்கும் அடிமையாகிவிட மாட்டோம். ஜனநாயகமும் உலக

(7-ம் பக்கம் பார்க்க)

❋

4-ம் பக்கத் தொடர்ச்சி

வேடத்துடன்தோன்றமாட்டார்கள். 'மாகாளி'யாகத் தோன்றுவர். தென்றல் அடிக்காது — புயல் வரும் அப்பொழுது! எழில் கொழிக்கும் மலை தெரியாது — புகையும் எரிமலையாக மாறும்! இதைஇடந்தேடிகள்மறந்து விடக்கூடாது.

X X X

ஊழல் மலிந்துவிட்டது, உதவாக்கரைகள் புகுந்துவிட்டன, நிறைய என்று நாம் சொல்லவில்லை—அவர்களில் பலர் பேசிக்கொள்கிறார்கள்.

ஹூக்ளி ஜில்லாவில் சமீபத்தில் நடைபெற்ற காங்கிரசு பஞ்சாயத்து தேர்தல்களின்போது ஊழல் முறைகளும், பித்தலாட்ட காரியங்களும் நடைபெற்றதைக் கண்டிப்பதற்காக, மேற்கு வங்க மாகாண காங்கிரஸ் நிர்வாக கவுன்சில் அங்கத்தினரும் 70 வயது தொண்டு கிழவருமான பண்டித திரேந்திரநாத பட்டாசார்யா சென்ற ஒரு வாரமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இதையும் படியுங்கள். பிறகு, ஆதாரவா, இல்லை இடந்தேடிகளின் நாகப்படமாட்டமா இந்த தேர்தல் போட்டியென்று சொல்லுங்கள்!

ஊழல்களைக் கண்டிக்க ஒரு கிழவர் உண்ணாவிரதமிருந்திருக்கிறார். ஆனாலும் சொல்கிறார்கள், மக்கள் அவர்களை நம்பியிருக்கிறார்களாம்—ஆகவே விடாது தொடர்ந்து வேலை செய்யவேண்டும் என்று ஓயாது ஓப்பாரி வைக்கின்றனர்.

நண்பன் நாயகம் வீசிய கேள்வி—என் விடையைக் கண்டு திகைத்துவிட்டது! கேள்விக்குறி ஆச்சர்யக் குறியாக மாறிவிட்டது. அந்தக்குறி வளர்ந்து அபாயக்குறியாகவும் மாறும்—மாறவேண்டும்.


**மகத்தான நாடக விழா!**

**தஞ்சை**

**இராமநாதன் செட்டியார் ஹாலில், 17—7—50 திங்கள் இரவு 10-மணிக்கு**

**சி. என். அண்ணாதுரை தலைமையில்**

**★ கைதி ★**

(By A. K. வேலன்)

**நாடக அரங்கேற்றம்**

நடிகமணிகள்:— டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன், பி. எஸ். வெங்கடாசலம், எம். என். கிருஷ்ணன், பி. ஆர். லட்சுமிபதி, எ. எம். மருதப்பா, ஆகியோர் நடிக்கும் சிந்தனைச் சித்திரம்.

18—7—50 தோழர் இரா. நெடுஞ்செழியன், M. A.
20—7—50 இசைவாணர் M. K. தியாகராஜபாகவதர்.
21—7—50 தோழர் க. அன்பழகன், M. A.
22—7—50 கலைவாணர் N. S. கிருஷ்ணன். ஆகியோர் தலைமை தாங்குவர்.

(ADVT) **நடிகப் பண்ணை கரந்தை.**


Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.